பக்கங்கள் : பதின்னான்கு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 15 வியாழக்கிழமை (29.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 213

# கற்பிட்டிக் கடலில் ஒருமணிநேரம் சமர்

# கடற்படை 'வோட்ட ஜெற்' மூழ்கடிப்பு!

## புலிகளின் அணியை வழிமறித்தபோது சண்டை விமானப்படையும் உதவி! புத்தளம் நகரில் பதற்றம்

புத்தளம், ஜூன் 29

புத்தளம், கற்பிட்டிக் கடற் பகுதியில் நேற்று முற்பகல் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையே மூண்ட கடற் சமரில் கடற்படை ரோந்துப் படகு (வோட்ட ஜெற்)ஒன்று எரிந்து மூழ்கியிருக்கின்றது. அதிலிருந்த ஏழு கடற்படையினர் காணாமற் போயிருப்பர் என அஞ்சப்படுகிறது. சுமார் 55 நிமிட நேரம் நீடித்த இந்தக் கடற்சமரில் கடற்படையினரின் நீர் உந்து விசைப் படகு ஒன்றைத் தாங்கள் மூழ்கடித்தனர் என்றும் -

அதிலிருந்த ஐந்து கடற்படையினர் வரை உயிரிழந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கின்றனர்.

தமது தரப்பில் கடற்புலிப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்ததுடன் இருவர் காயமடைந்தனர் என்றும் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

கற்பிட்டிக்கும், குதிரைமலைக்கும் இடையே கடற்புலிகளின் 15 படகுகள் அடங்கிய படகு அணியைக் கடற்படைப் படகுகள் வழிமறித்த போது இந்த மோதல் மூண்டது என்று கூறப்படுகிறது.

கற்பிட்டிக் கடலில் சண்டை மூண்டதை கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. திஸநாயக்க உறுதிப்படுத்தினார்.

நேற்று முற்பகல் 11.45 மணியளவில் இந்த மோதல் வெடித்தது. கடற்புலிகளின் படகுகளில் இருந்து நடத்தப்பட்ட றொக்கெட்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கைக்குண்டு வீச்சு பொலிஸார் இருவர் படுகாயம்!

மன்னாரில் தொலைத் தொடர்பு நிலையத்துக்கும் பொலிஸ் நிலையத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் பொலிஸார் மீது கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இதில் இரண்டு பொலிஸார் காயமடைந்தனர். அதனையடுத்து, பொலிஸார் மேற்கொண்ட

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மயிலம்பாவெளியில் 3 இளைஞர்கள் சுட்டுக்கொலை!

ஏறாவூர், ஜூன் 29

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலம்பாவெளி பிரதான வீதியில்வைத்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மூன்று இளைஞர்கள் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிஓயாவில் தாக்குதல் சிப்பாய் பலி; நால்வர் காயம்

கொழும்பு,ஜூன்29

வெலிஓயா கொக்குத்தொடுவாய் படையினரின் காவலரண் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். நால்வர் காயமடைந்த நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 9 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் படைச்சிப்பாய் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். படுகாயமடைந்த நால்வரும் அநுராதபுரம் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க)

### கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதி

## பாடசாலைகளில் வெடிகுண்டு எனப் பரவியது வதந்தி மாணவர்கள் நேற்று பெரும் அல்லோலகல்லோலம்!

கொழும்பு, ஜூன் 29

தலைநகர் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் பாடசாலைகளில் வெடிகுண்டுகள் இருப்பதாகப் பரவிய வதந்தி காரணமாக நேற்றுக் காலை பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

காலையில் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சென்றடையும் நேரத்தில் காட்டுத் தீ போல பரவிய இந்த வதந்தி அவர்கள் மத்தியில் பெரும் அல்லோலகல்லோலத்தை ஏற்படுத்தியது.

பொலிஸாரும், படையினரும் இணைந்து கொழும்பு நகர், அதனை அண்டிய பகுதிகளான வத்தளை-மாபோல மற்றும் நாட்டின் ஏனைய இடங்களிலும் உள்ள பாடசாலைகளில் தேடுதல்களை மேற்கொண்டனர்.

இதனால், பெரும் பரபரப்பு ஏற்பட்டதோடு பல பாடசாலைகள் செயலிழந்தன. சில பாடசாலைகள் இயங்கிய போதிலும் மாணவர் வரவு வெகுவாகக் குறைந்திருந்தது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டப்பகலில் ரூபா 12 லட்சம் துப்பாக்கி முனையில் கொள்ளை

### ஒரு மாதகாலத்தில் யாழ்.நகரில் மூன்றாவது சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ்.நகரப்பகுதியில் இயங்கும் வங்கி ஒன்றில் வைப்பிலிடுவதற்கென எடுத்துச் செல்லப்பட்ட 12 லட்சம் ரூபா பணம் ஆயுதமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

பட்டப்பகலில் இந்த துணிகரக்கொள்ளை இடம்பெற்றுள்ளது.

யாழ்.முட்டாஸ் கடைச் சந்திக்குச் சமீபமாக மானிப்பாய் வீதியில் நேற்று முற்பகல் 11 மணி

(14 ஆம் பக்கம் பார்க்க)

### சிங்களவர்கள் கொடுத்த தகவலை அடுத்து

## ஒன்பது பொறியியல்பீட தமிழ் மாணவர்கள் மொறட்டுவையில் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஜூன் 29

மொறட்டுவை, சொய்ஸாபுர தொடர் மாடியில் தங்கியிருந்து மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றுவரும் பொறியியல் பீடத்தின் ஒன்பது தமிழ் மாணவர்கள் மொறட்டுவைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

பொலிஸாரின் கோரிக்கையின் பேரில் அந்த ஒன்பது மாணவர்களையும், ஒரு வார காலம் விளக்க மறியலில் வைப்பதற்கு நீதி மன்றம் உத்தரவிட்டது.

கே. கமலரூபன் (அரியாலை, யாழ்ப்பாணம்), பி.மயூரன் (விசுவமடு, முல்லைத்தீவு), ரி. அஜந்தன் (வேப்பங்குளம், வவுனியா), கே. அஸ்ரன்(யாழ்ப்பாணம்), ரி.ஆனந்த் (திரு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் புலிகள் பகுதியில் ஆழ ஊடுருவி கிளைமோர்!

### பொதுமக்கள் மூவர் உயிரிழப்பு!

மன்னார்,ஜூன்29

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான முசலியில் நேற்று ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் பொதுமக்கள் மூவர் உயிரிழந்தனர்.

நேற்றுமாலை 4.30 மணியளவில் முசலி கொக்குப்படையான் என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மணல் ஏற்றிக்கொண்டு திரும்பிய டிராக்டரை இலக்குவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் குடும்பஸ்தரான சா. யக்கோபு (வயது-51), இளைஞர்களான

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறிலும் தாக்குதல் படைச் சிப்பாய் மரணம்

மணலாறு கொக்குத்தொடுவாய் பகுதியில் அமைந்துள்ள இராணுவ காவலரண் மீது நேற்றுக்காலை நடத்தப்பட்ட தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் -

இந்தத் தாக்குதலையடுத்து மணலாறில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது படையினர் ஷெல் தாக்குதலை நடத்தினர் என்றும் - புலிகளும் படை நிலைகளை நோக்கி எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## எந்தவித அழுத்தங்களுக்கும் அடிபணியாது பணிப்புறக்கணிப்புக்கு முழுமையான ஆதரவு

### யாழ். மாவட்ட பொங்கியெழும் மக்கள்படை அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்29

எந்தவித அழுத்தங்களுக்கும் அடிபணியாது பணிப்புறக்கணிப்பில் முழுமையாகப் பங்கேற்பதன்மூலம் படையினருக்கு எமது முழுமையான எதிர்ப்பைத் தெரிவிப்போம்.

இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது யாழ். மாவட்ட பொங்கியெழும் மக்கள்படை.

இது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையில்,


யாழ். குடாநாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும், தாயகப் பிரதேசத்தில் அச்சமின்றி அன்றாட வாழ்க்கையை வலியுறுத்தக்கோரியும் இடம்பெற்றுவரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை நிறுத்

(14 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் புதிய தலைவர் பேரருள் திரு.டபிள்யூ பி.எபனேசர் ஜோசப் மூன்றுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த ஞாயிறன்று வடமராட்சிக்கு விஜயம் செய்தார். இந்த விஜயத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
வடமராட்சிப் பகுதியில் உள்ள மெதடிஸ்த திருச்சபைகளையும், இலங்கை மெதடிஸ்த திருச்சபையினரால் முன்னெடுக்கப்படும் சுனாமி மீள் கட்டுமானப் பணிகளையும் பார்வையிடவந்த புதிய தலைவர் வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும் - கட்டைவேலி திரித்துவ மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் அவர் உரை நிகழ்த்துவதையும் மீள் கட்டுமானப்பணிகளைப் பார்வையிடுவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

## கொழும்பு மாநகரசபையில் நேற்று சுவாரஸ்யம்

# முதல் அமர்விலேயே கட்டிப்புரண்டு சண்டை; நைஸாக நழுவி ஓடித்தப்பினார் புதிய மேயர்!

கொழும்பு, ஜூன் 29

நேற்று இடம்பெற்ற கொழும்பு மாநகர சபையின் முதலாவது சபை அமர்வின்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் உறுப்பினர்களிடையே பெரும் கைகலப்பு ஏற்பட்டது. இக்கைகலப்பு சுமார் அரைமணி நேரம்வரை நீடித்ததோடு சண்டை தொடங்கியவுடனேயே மேயர் இம்தியாஸ் உவைஸ் அஹம்மட் ஓடித்தப்பிவிட்டார்.

கொழும்பு மாநகரசபையின் முதலாவது அமர்வு நேற்றுமுற்பகல் 11 மணிக்கு மேயரின் தலைமையில் இடம்பெற்றது. முதலாவதுசபை அமர்வின்போது குழுக்கள் நியமிப்பது மரபு. நிகழ்ச்சி நிரலிலும் கூட இக்குழுக்கள் நியமிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

சபை கூடியபோது குழுக்களை நியமிப்பதற்கு மேயர் இணக்கம் தெரிவித்தார். அப்போது அவரது காதில் ஏதோ ஓதினார் கொழும்பு மாநகர சபையின் செயலாளர். இதனையடுத்து குழுக்களை இப்போதைக்கு அமைக்கமுடியாதென்றும், தாம் சபையை ஒத்திப்போடுகிறார் என்றும் கூறிவிட்டு ஆசனத்தை விட்டு எழுந்துசெல்ல முற்பட்டார் மேயர்.

காரணமில்லாமல் சபையை ஒத்திப்போடுவதாக அறிவித்ததால் உறுப்பினர்கள் கூச்சல் போடத் தொடங்கினர். அப்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் எழுந்து ஓடி மேயரின் காதில் ஏதோ ஓதி சபையை ஒத்திப்போடக் காரணமாக விருந்த அந்தப் பெண் செயலாளரைத் தள்ளி விட்டார்.

இதனால் கோபம் அடைந்த அதேகட்சியைச் சேர்ந்த மற்றுமொரு உறுப்பினர் செயலாளரைத் தாக்கிய உறுப்பினரைத் தாக்கினார். இருவரும் கட்டிப்பிடித்து உருண்டனர்; இழுபறிப்பட்டனர். உடனடியாக சக உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஓடிவந்து சண்டைபோட்ட இருவரையும் பிரித்துவிட்டனர்.

இந்த அமளிதுமளிகளுக்கு நடுவே அங்கிருந்து நைஸாக நழுவிச்சென்ற புதிய மேயர் இம்தியாஸ் உவைஸ் அஹம் மட் ஓடித்தப்பிவிட்டார்.

அரைமணிநேரமாகத் தொடர்ந்த இந்தச் சண்டை அதன்பின்பு ஒருவாறு ஓய்வுக்கு வந்தது.

சபை அமர்வை ஒத்திப்போடக்கூடிய அதிகாரம் மேயருக்கு இருக்கின்றபோதிலும் காரணம் ஏதுமில்லாமல் - குழுக்களை நியமிக்காமல் - சபையை மேயர் ஒத்திப்போட்டமையை எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் கடுமையாகக் கண்டித்தனர்.

குழுக்களை நியமிக்காவிட்டால் கொழும்பு மாநகரசபையின் நடவடிக்கைகளை முன்கொண்டு செல்லமுடியாது எனத் தெரிவித்திருக்கும் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள், சபையைக்கொண்டுசெல்ல முடியாவிட்டால் மேயர் தமது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

சபை மீண்டும் கூடும் திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

## சைவ பரிபாலன சபை ஏற்பாட்டில் மணிவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூன்29

யாழ். சைவபரிபாலனசபையினர் ஏற்பாடு செய்துள்ள மாணிக்கவாச சுவாமிகள் குருபூசை நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருபூசைதின நிகழ்வில், சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்படும் முன்பள்ளி மாணவர்களினதும், யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளினதும் திருவாசகம் ஓதுதல், பேச்சு என்பனவும் -

திருவாசகமணி க.மாணிக்கவாசகர் மற்றும் மு.சிவலோகநாதன் ஆகியோர் நிகழ்த்தும் விசேட சமயச் சொற்பொழிவு என்பனவும் இடம்பெறும்.

திருவாசகமணி க.மாணிக்கவாசகர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் அனுசரணையுடன் இந்த குருபூசைதின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

# சிறுவர் உரிமை மீறல்களை ஆராய ஐ.நா. விசேட பிரதிநிதி வருகிறார்

கொழும்பு, ஜூன் 29

சிறுவர்களின் உரிமைகள் பாரிய அளவில் மீறப்படும் சம்பவங்கள் இலங்கையில் அதிகரித்து வருவது கண்டு கவலையடைந்துள்ள, ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஐ.நா.வின் விசேட பிரதிநிதி கலாநிதி ராதிகா குமாரசுவாமி, இந்த உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான நிலைவரங்களை விசாரித்து அறிந்து வரும் பொருட்டு ஐ.நா.வின் விசேட பிரதிநிதியாக, கனடிய ஐ.நா. தூதுவர் அலன் ரொக் என்பவரை நியமித்திருக்கிறார்.

இவர் மிக விரைவில் இங்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

"விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் சிறுவர்களைப் படைக்குத் திரட்டி வருகிறார்கள். கருணா அணியினரும் பதினெட்டு வயதுக்குக் குறைந்த சிறுவர்களைக் கடத்திச் சென்று தமது அணிகளில் சேர்க்கிறார்கள் என்றும் எமது அலுவலகத்துக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளன.

இவற்றை விட மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பலரும், சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் தெரிய வந்துள்ளது.

எனவே, இவை பற்றி விசாரித்து ஆராய்ந்து உண்மை நிலையைக் கண்டறிந்து வரவே அலன் ரொக்கை இந்த விசேட பணிக்கு நியமித்திருக்கிறேன் என்று கலாநிதி ராதிகா குமாரசுவாமி கூறினார்.

## மூதூர் கிழக்கில் ஷெல்வீச்சு இரு பொதுமக்கள் படுகாயம்

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மூதூர் கிழக்குப் பகுதியை நோக்கி நேற்றுக்காலை 8.45 மணியளவில் மோட்டார் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் இரு பொதுமக்கள் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் மூதூர் வைத்தியசாலையிலும், மற்றையவர் திருகோணமலை வைத்தியசாலையிலும் சேர்க்கப் பட்டுள்ளனர்.

கடற்கரைச்சேனையில் பொதுமக்கள் குடியிருப்புப் பகுதியில் ஐந்துக்கு மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## கோண்டாவில் இ.ம.வி. மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்29

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் மூலம் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு 2ஆவது தடவையாகத் தோற்றவுள்ள மாணவர்களை உடனடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## காணாமற்போனோர் குறித்து நீதிமன்றில் முறைப்பாடு செய்வோர் எண்ணிக்கை உயர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்29

குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சட்டவிரோத கைதுகள் மற்றும் காணாமற்போதல் தொடர்பாக பொதுமக்கள் நீதிமன்றத்தில் முறையிட சட்ட ஏற்பாடுகள் உள்ளன என்றும் -

அதனைப் பொதுமக்கள் பயன்படுத்தலாம் என்றும் - யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அறிவுறுத்தியிருந்தார்.

இந்த அறிவுறுத்தலையடுத்து காணாமற்போனமை தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை ஒரு முறைப்பாடும் -

கடந்த திங்கட்கிழமை இரு முறைப்பாடுகளும், அச்சுறுத்தல் தொடர்பாக ஒரு முறைப்பாடும் யாழ். நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை நீதிமன்றம் ஆரம்பித்துள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கைக்கு கப்பல் இத்தாலி வழங்கியது

இலங்கைக்கு இத்தாலி அதிவேக கரையோரப் பாதுகாப்பு கப்பலொன்றை வழங்கியுள்ளது. இலங்கையிலிருந்து இத்தாலிக்கு இலங்கையர்களும், வேறு நாட்டவர்களும் சட்டவிரோதமாக குடியேறச் செல்வதைத் தடுக்கும் நோக்கில் கரையோர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்காகவே இக்கப்பல் வழக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நவீன கருவிகளுடன் கடலில் மூழ்க முடியாத வகையில் இக்கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இலங்கையிடம் கையளிப்பதற்கெனவே இந்தக் கப்பலை இத்தாலி விசேடமாக வடிவமைத்துள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

## விவசாய பீடத்திற்கு புதிய பீடாதிபதி

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதியாக கலாநிதி சிவமதி சிவச்சந்திரன் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பயிரியல்துறைத் தலைவரான இவர் மூன்று வருடங்களுக்குப் பீடாதிபதியாகப் பணியாற்றுவார்.

# திருமலையில் நேற்று கதவடைப்பு

திருகோணமலை,ஜூன்29

வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகத்தை இராணுவ மயமாக்குவதைக் கண்டித்து திருமலையில் நேற்று புதன்கிழமை முழு கதவடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

திருமலை தமிழ் மக்கள்பேரவை சார்பில் இந்த முழு அடைப்புப் போராட்டம் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு ஆளுநராக ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி மொஹான் சமரவிக்கிரமவும், அரச அதிபராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் றஞ்சித் சில்வாவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

குடிசார் நிர்வாகத்தை இராணுவ மயமாக்கும் நோக்கிலேயே இந்த நியமனங்களை அரசு வழங்கியதாக தமிழர் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் அரச படைகளால் தமிழ் மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டு வரும் நிலையில் இத்தகைய இராணுவ மயமாக்கல் மேலும் பாரிய ஆபத்துக்களை உருவாக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நியமனங்களைக் கண்டித்து நேற்று முழு கதவடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. திருமலை நகரசபை, வடக்கு - கிழக்கு மாகாண சபை, உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் வங்கிக் கிளைகள், பாடசாலைகள், கடைகள் மற்றும் சந்தைகள் அனைத்தும் நேற்று மூடப்பட்டிருந்தன.

போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறவில்லை. இதனால் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. வீதிகளில் மேலதிக படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். (க)

# சம்பள அதிகரிப்பு நடைமுறையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவர்த்தி

அச்சுவேலி,ஜூன்29

சம்பள அதிகரிப்பில் பாதிப்புக்கு உள்ளாகி பெற்ற சம்பளத்திலும் குறைவான சம்பளம் பெறவேண்டிய நிலையில் உள்ள ஊழியர்களின் சம்பளத்தைக் குறைக்காமல் அவர்கள் பெற்றுவரும் சம்பளத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு திணைக்களத்தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

[illegible] ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின் 2ஆம் கட்ட சம்பள அதிகரிப்புக்கும் மகிந்த சிந்தனை அடிப்படையிலான முதலாம் கட்ட சம்பள அதிகரிப்புக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாட்டினால் தரம் 1 இல் உள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களில் உச்ச சம்பளம் பெறுபவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்போது பெற்றுக்கொண்டிருக்கும் சம்பளத்தைவிட குறைவான சம்பளத்தை பெறுபவர்களின் சம்பளத்தைக் குறைக்காமல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பிவைத்துள்ளது. (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## உறவு துளிர்ப்பதைக் கெடுக்க முளையிலேயே திரிப்பு முயற்சி

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் வைத்து இந்தியத் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி சர்ச்சையை உருவாக்கியிருக்கின்றது.

''ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் ஒரு பெரிய - வரலாற்றில் மறக்கமுடியாத - துன்பியல் நிகழ்வு. அதற்காக நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.'' - என்று அன்ரன் பாலசிங்கம் கூற, அதற்கு வேறு அர்த்தத்தைக் கொடுத்து, அவரது கூற்றைத் திரிபுபடுத்தி போட்டடித்திருக்கிறது சம்பந்தப்பட்ட செய்தி நிறுவனம்.

பாலசிங்கம் கூறிய மேற்படி கருத்துக்களை வைத்துக்கொண்டு ராஜீவ் கொலைக்கான பொறுப்பை, இப்போது பதினைந்து ஆண்டுகள் கழித்து புலிகள் முதல் தடவையாக ஏற்றுக் கொண்டுள்ளனர், அதற்காகத் தங்களை மன்னிக்கும்படி இந்தியாவிடமும், இந்திய மக்களிடமும் புலிகள் மன்றாடுகின்றார்கள் என்றெல்லாம் சாரப்பட தனது கருத்தை மதியுரைஞர் பாலாவின் கருத்தாகக் குறிப்பிட்டு பிரசாரம் செய்தது அந்தத் தொலைக்காட்சி நிறுவனம்.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக மதியுரைஞர் பாலா தெரிவித்த முக்கிய கருத்தை அந்த நிறுவனம் ஒளிபரப்பவில்லை.

''ராஜீவ் கொலையை ஒரு தனி மனித கொலைச் சம்பவமாக அணுகுவது அல்லது பார்ப்பது தவறு. ஈழத் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிட்ட அரசியல் வரலாற்றுப் பின்புலத்தின் அடிப்படையில்தான் இச் சம்பவத்தை தொடர்புபடுத்திப் பார்க்கவேண்டும்.'' - என்று பாலா குறிப்பிட்டதை அமுக்கிவிட்ட அந்த நிறுவனம், பாலா தெரிவிக்காத கூற்றுக்கு பதில் கருத்துக்களை புலிகளுக்கு எதிரான பிரமுகர்களைத் தேடிப்பிடித்து அவர்கள் மூலம் வெளிப்படுத்தித் தனது திருகுதாள வேலையை கனகச்சிதமாக முன்னெடுத்திருக்கின்றது.

''கடந்த கால சம்பவங்களை மறந்து, விடயங்களைத் தாராள மனப்பான்மையோடு புதிய போக்கில் அணுகுமாறு இந்திய அரசையும், இந்திய மக்களையும் நாம் வேண்டுகின்றோம்.'' - என்று ஈழத்தில் அல்லல்படும் தமிழர்களின் சார்பில், ஈழத் தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாக நின்று மதியுரைஞர் பாலசிங்கம் அழைப்பு விடுக்க -

அதற்குப் பதிலடி கொடுப்பதற்கு புலிகள் மீது பகையுறவும், விரோதப் போக்கும் கொண்ட இந்தியப் பத்திரிகையாளர் ராம் மற்றும் புலனாய்வாளர் கார்த்திகேயன் போன்றோரைத் தேடிப் பிடித்து அந்த சமரச முயற்சிக்கு முளையிலேயே ஆப்பு வைக்கும் திருவிளையா டலை நிறைவேற்றியிருக்கிறது இந்தியத் தரப்பின் ஊதுகுழல் நிறுவனம்.

மதியுரைஞர் பாலா வழங்கிய சுமார் ஒரு மணி நேரப் பேட்டியில் சில நிமிடங்களை மட்டும் - 'முண்டத்தை' மட்டும் - ஒளிபரப்பிய அந்த நிறுவனம் அதை முழுமையாக ஒளிபரப்புமானால் அது நிச்சயம் ஈழத் தமிழர்களின் அவல நிலை குறித்து இந்திய அரசினதும், இந்திய மக்களினதும் நெஞ்சை ஆழமாகச் சென்று தைக்கும் - தொடும் - என்ற நம்பிக்கை தமிழர் தரப்புக்கு உண்டு.

மதியுரைஞர் பாலாவின் கருத்தை எடுத்தெறியும் விதத்தில் அந்தச் செவ்வியை ஒட்டி கருத்து வெளியிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆனந்த் சர்மாவின் பதில்கள் குறித்து அழுவதா, சிரிப்பதா என்பது தெரியாமல் சஞ்சலப்படுகின்றார்கள் ஈழத் தமிழர்கள்.

''இந்தியாவைப் பொறுத்தவரை அது இலங்கையில் அமைதி, ஸ்திரம், ஐக்கியம் ஆகியவற்றையே விரும்புகின்றது.'' - என்று வலியுறுத்திக் கோரிய இந்திய இணை அமைச்சரிடம் அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கடைசியாக ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

''இலங்கைப் பிரச்சினை இவ்வளவு மோசமான வடிவம் எடுக்க முன்னர் ஆரம்பத்தில் புலிகளுக்கு இந்தியாவே பயிற்சியளித்தது என்ற சர்ச்சைக்குரிய குற்றச்சாட்டு இருந்து வருகிறது. அதை பாலசிங்கமும் மீண்டும் சுட்டிக்காட்டியிருக்கின்றாரே?'' - என்ற கேள்விக்கு இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் அளித்த பதில் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளும், ஆச்சரியத்துக்குள்ளும் மூழ்கடித்தது.

முதலாவதாக -

''இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்துபவர் யார்? அவர் புலிகளின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியா என்பது எங்களுக்குத் தெரியாது.'' - என்று இந்தியத் தரப்பில், அதுவும் வெளிவிவகாரத்துக்குப் பொறுப்பான இணை அமைச்சர் பதவியிலிருக்கும் ஒருவர் கூறியிருப்பது வியப்புக் குரியது.

அன்ரன் பாலசிங்கம் புலிகளின் தத்துவாசிரியர். மதியுரைஞர், பேச்சாளர். அமைதி முயற்சிகளுக்கான புலிகளின் பேச்சுக் குழுவின் தலைவர். இந்தியா உட்பட சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் புலிகளின் சார்பில் பல மட்டங்களில் தொடர்பு கொண்டு பங்காற்றியவர். தலைவர் பிரபாகரன் முன்பாகப் பத்திரிகையாளர்கள் திரண்டிருந்த சமயம் தலைவரையும் வைத்துக்கொண்டு ''தலைவர் பிரபாகரன் கூறினாலும் நான் கூறினாலும் ஒன்றுதான்'' எனத் தலைவரின் குரலாகப் பகிரங்கமாக ஒலித்தவர்; ஒலிப்பவர்.

அவரைப் பார்த்து ''அவர் யார்? புலிகளின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியா அவர் என்பது தெரியாது.'' - என இந்திய அமைச்சர் கூறுவது அவரது பதவிக்குப் பொருத்தமற்ற வகையில் கேலிக்கூத்தானது.

எண்பதுகளின் நடுப்பகுதியில் புலிகள் உட்பட அனைத்து ஈழத் தமிழ்ப் போராளிகளுக்கும், போராளிகள் அமைப்புகளுக்கும் இந்தியா தனது மண்ணில் ஆயுதப் பயிற்சி கொடுத்துத் தூண்டிவிட்டது என்பது சர்வதேசம் அறிந்த பரகசியம்.

அந்தப் பயிற்சி வழங்கப்பட்ட காலத்திலேயே புலிகளின் மதியுரைஞ ராகவும், பேச்சாளராகவும் இருந்தவர் பாலசிங்கம். அவர் யார் என்று இப்போது கேட்கும் இணை அமைச்சர் ஆனந்த் சர்மா அப்போது இந்திய அரசியலிலேயே ஒரு பிரமுகராக இருந்திருப்பாரோ என்பது தெரியவில்லை.

அந்தக் கேள்வியில் கேட்கப்பட்டது போல ஈழத் தமிழ்ப் போராளிகளுக்குப் பயிற்சி கொடுத்துத் தூண்டிவிட்டு இலங்கைத் தீவு, இரத்தத் தீவாக மாறுவதற்குக் காரணமாக இருந்த மூல சக்திகளில் இந்தியாவும் ஒன்று.

அந்தப் பொறுப்பை அப்படியே பொய் என்று மறுத்திருக்கிறார் இந்திய அமைச்சர் ஆனந்த் சர்மா.

இந்தியா ஈழத் தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதங்களும், பயிற்சியும் வழங்கியது சரியா, தவறா என்பது வேறு விடயம்.

ஆனால், அப்படிச் செய்துவிட்டு, அதை மறந்து, இப்போது மறுத்து, ''இலங்கையில் அமைதி,ஸ்திரம், ஐக்கியம் ஆகியவற்றையே இந்தியா விரும்புகின்றது.'' - என்று உருத்திராட்சப் பூனை போல இந்தியத் தரப்பு பேச முடியுமானால் -

''கடந்த காலத்தை ஒதுக்கிவிட்டு இந்தியாவுடன் புதிய போக்கில் நல்லுறவு பேண ஈழத் தமிழர்களும், புலிகளும் விரும்புகின்றார்கள்'' - என்று புலிகளின் பிரதிநிதி கூறுவதில் தவறேதும் இல்லை. அப்படி எதிர்பார்ப்பது நியாயமானதும் கூட.

# தமிழ்ப் பெண்களை தமிழ் சினிமா கேவலப்படுத்துகிறது

## தேசியத் தலைவர் பிரபாகரன்

**'1996' என்ற பெயரில் சினிமா திரைப்படம் ஒன்றைத் தயாரிப்பதற்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்து தங்கியிருந்த தென்னிந்திய சினிமா இயக்குநர் மகேந்திரன் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்தார். அந்தச் சந்திப்புக் குறித்து நேற்று வெளியான குமுதம் சஞ்சிகையில் அவரே மனந்திறந்து பேசுகிறார்...**

திடீரென்றுதான் அழைப்பு. ரொம்ப நாளாக நின்று போயிருந்த 'சாசனத்தின்' இறுதிக்கட்ட வேலைகளில் இருந்தேன். தமிழீழத்தில் சினிமா பற்றி ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு சினிமா பற்றிச் சொல்லி, ஒரு படம் தயாரித்துத் தரவேண்டும். வரமுடியுமா? என்று கேட்டார்கள். மறுவார்த்தையாக மறுப்புச் சொல்லாமல் சம்மதித்தேன். அருமையான மூன்று மாதங்கள். அங்கேயிருந்து '1996' என்ற அவர்களின் வாழ்க்கை சார்ந்த சினிமாவை எடுத்துக்கொடுத்தேன். யாருமே முறைப்படி அனுபவம் பெற்ற நடிகர்கள் கிடையாது. '1996' இன் இறுதிக்கட்ட வேலைகளில் இருந்தபோதுதான், திடீரென்று எடிட்டிங் அறையின் வெளியே கார் வந்து நின்றது.

சினிமா, கலைப் பிரிவுக்குத் தலைமை வகிக்கும் சேரா என்னை அணுகினார். ''நீங்கள் அவசியம் 'அவரைச்' சந்திக்க வேண்டும். அவரும் உங்களோடு கதைக்க விரும்புகிறார். இப்போதே நீங்கள் புறப்பட வேண்டும்'' - என்றார்கள். அதற்கான ஏற்பாடுகள், விவரணைகள், பாதுகாப்பு, சிறிய பதற்றம், பரபரப்பு, ஆர்வம். நாம் சந்திக்கப் போகிறவர் யார் என்று புரிந்து



விட்டது. வேகம் பற்றிக்கொண்டது. சூழ்நிலை கெடுபிடி ஆகிவிட்டது. வழியெங்கும் 'தம்பி'யின் படை. பிரமாதமான கட்டுக்கோப்பு. உங்களில் யாராலும் யூகிக்க முடியாத இடத்தை நோக்கிய பயணம். சேரா என்னிடம் மெல்லிய சிரிப்போடு, பேசிக்கொண்டே வந்தார். ''தலைவர் உங்களின் உழைப்பைப் பற்றி விசாரித்தார். சந்தோஷப்பட்டார். பார்க்க வேண்டும் என்று விரும்பினார். இந்த விருப்பம் சாதாரணமானதல்ல'' என்று பேசிக்கொண்டே வந்தார். எனக்கு ஒன்றுமே நிலைகொள்ளாமல் தவித்தேன். உலகத்தையே தன் பக்கம் பார்க்க வைக்கிற மாபெரும் தலைவன். அவரையே சந்தித்துப் பேசப்போகிற பேரனுபவம். அதை எப்படி நாம் உள்வாங்கப்போகிறோம் என்றெல்லாம் சிந்தனைகள்.

திடீரென்று அடுக்கடுக்கான விசாரணைகள். பாதுகாப்பு குளறுபடி இல்லாத கம்பீரமான விசாரணை - இருப்பிடம் நெருங்கப்போகிறோம் என்று தெரிந்துவிட்டது. சேராவிடம், ''நான் அவரை எப்படிக் கூப்பிடுவது. சார் என்றா, அல்லது வேறு முறையிலா?'' என்று, போட்டோக்களில் பார்த்திருந்த அவரின் கம்பீரத்தை நினைவுபடுத்திக் கேட்டேன். ''நீங்கள் அவரைத் 'தம்பி' என்று அழைத்தால் பிரியப்படுவார். நாங்கள் எல்லாருமே அவரை எங்களுக்குள் அழைக்கும் விதம் அதுதான். ஒன்றும் பயப்பட வேண்டாம்'' என்றார். நான் பயப்படவில்லை. பெருமிதப்பட்டேன்.

'அந்த' இடமும் வந்தது. அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் வெள்ளைச் சிரிப்போடு எங்கிருந்தோ பிரசன்னமானார். என்னை வரவேற்று, 'அவர்' இருக்கிற அறைக்கு அழைத்துப்போனார். நான் எப்படி அந்தக் கதவைத் திறப்பது என்று கணநேரம் திகைத்தபோது, மெல்லத் திறந்தது கதவு. வர்ணிக்க முடியாத கம்பீரத்தில் என்னை வணங்கினார் பிரபாகரன். என்னால் அவரை 'ஐயா' என்றுதான் அழைக்க முடிந்தது. என்னை இருக்கையில் அமர்த்திய பிறகே உட்கார்ந்தார். என் மனக்கதவுகளெல்லாம் திறந்து உள்ளே போய்க்கொண்டேயிருந்தார் 'தலைவர்'. உருகிக்கரைந்து உள்ளே போய்க்கொண்டேயிருந்தேன். அன்போடு பேசத் தொடங்கினார் 'தம்பி'.

''நாங்கள் உறக்கம் இல்லாமல், சதா விழித்துக்கொண்டேயிருக்கிறோம் என்றால், நீங்களும் ஏன் அப்படி இருக்க வேண்டும்?. 'உழைக்கிற நேரத்திற்குத் தகுதியாக நீங்கள் ஓய்வெடுக்கலாம்' என்ற கரிசனத்தோடு ஆரம்பமானது பேச்சு. இரண்டு பேருமே 'ஐயா' என்று விளித்துக்கொண்டோம். ''இராணுவம் எங்கள் நாட்டில் இளம்பெண்களைக் கற்பழித்தது. அப்படிக் கேவலப்படுத்தியதைவிட, தமிழ் சினிமா பெண்களை இழிவுபடுத்துகிறது'' என்று வருத்தத்தோடு பேசினார். 'கன்னத்தில் முத்தமிட்டால்' எங்களைச் சரியாக முன்னெடுத்து வைக்கவில்லை என்று சுட்டிக்காட்டினார். பாரதிராஜா 'ஆய்த எழுத்து' படத்தில் நடித்திருக்க வேண்டியது அவசியம்தானா? என்று கேள்வி எழுப்பினார்.

தமிழ் சினிமாவின் மீது அக்கறைப்பட்ட பேச்சை அப்படியே ஹாலிவுட் பக்கம் திருப்பினார் தம்பி. எனக்கு ஆச்சரியம்... யார் இவர்! இவரின் பார்வைகள் என்ன? இப்படி ஒரு சின்ன தேசத்திலிருந்து உலகமே திரும்பிப்பார்க்க புறப்பட்டு வந்தது எப்படி? என்றெல்லாம் மனம் அலை பாய்ந்தது. ஹாலிவுட் படங்களும் திசை திரும்பியதைக் குறிப்பிட்டார். உங்களுக்கு 'ஹாரிசன் போர்டை' பிடிக்குமா? என்று எனக்குப் பிடித்த அவரையே குறிப்பிட்டார். படக்காட்சிகளைத் தனித்தனியாகப் பிரித்துப் பேசினார். எனக்கு 200 'ஹாலிவுட் சி.டிகளைப் பரிசாகத் தந்தார். அரைமணி நேரத்திற்கு இருக்கும் என்று நினைத்திருந்த பேச்சு மூன்றரை மணி நேரத்திற்கு விரிந்தது. என்னோடு உணவருந்தினார். என்னை முழுமையாக விசாரித்தார். 'முள்ளும் மலரும்' கிளைமேக்ஸ் தன்னைப் பாதித்ததைக் குறிப்பிட்டார். 'உதிரிப்பூக்கள்' அனுபவத்தைப் பகிர்ந்தார்.

நாங்கள் விடைபெறுகிற அந்தத் தருணம் வந்தேவிட்டது. வாசல் வரைக்கும் வந்து வழியனுப்பினார். கடைசியாகப் பேசிக்கொள்கிற நிமிடங்கள் உன்னதமாக அமைய, கூடியிருந்த பாதுகாப்புகளை விலகியிருக்கச் சொன்னார். 'நீங்கள் அடுத்த முறையும் வருவீர்கள். ஆனாலும் யுத்தம் அப்போதும் நடக்கும். இருந்தாலும் உங்களைச் சந்திப்பேன்' என்றார். அவரது பேரன்பின் அடையாளமாகச் சிறிய தங்கப்பதக்கத்தைக் கொடுத்தார். அவரோடு புகைப்படம் எடுத்துக்கொள்கிற விருப்பம் உடனே நிறைவேற்றப்பட்டது. திரும்பி வண்டியில் உட்கார்ந்தபோது சீருடை, துப்பாக்கிகளோடு தலைவரின் அனுபவ சாந்தமும் மனசுக்குள் வந்தது.

கொழும்பு விமான நிலையத்தை வந்தடைந்தேன். என்னுடைய கைப்பையை வாங்கி, ஒரு சிங்கள அதிகாரி சோதனையிட்டார். அந்தப் பதக்கத்தை பார்த்த மறு விநாடி என்னை நிமிர்ந்து பார்த்து, புன்னகைத்து, உடனே கைப்பையை மூடி என்னை விமானத்தின் வாசல் வரைக்கும் வழி நடத்தினார். விமானத்தில் வந்து உட்கார்ந்து யோசித்த



போது, சந்தித்த மூன்றரை மணி நேரமும் ஒரு வார்த்தைகூட பிரபாகரன் அரசியல் பேசவில்லை என்பது ஞாபகத்திற்கு வந்தது. அவருக்கு எரிக் சொல்ஹேய்மிடம் என்ன பேச வேண்டுமென்று தெரிந்திருக்கிறது. தமிழ்ச்செல்வனிடம் என்ன பேசவேண்டுமென்று தெரிந்திருக்கிறது. இந்த மகேந்திரனிடமும் என்ன பேசவேண்டுமென்று தெரிந்திருக்கிறது.''

## நாளை

ஆனி - 16
வெள்ளிக்கிழமை
30.06.2006
திதி : பஞ்சமி
பின்னிரவு : 03.39
நட்சத்திரம் : மகம்
பின்னிரவு : 12.41
சுபநேரம் : 05.56 - 07.26
ராகுகாலம் : 10.26 - 11.56

## நீர்சுத்திகரிப்பு திட்ட ஆரம்ப விழா

கரவெட்டி அத்துளு குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திர அங்குரார்ப்பண வைபவமும் கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழாவும் எதிர்வரும் 2ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நிர்மாணிக்கப்பட்ட கரவெட்டி அத்துளு குடிதண்ணீர் விநியோகத்திட்டத்துக்கு தேசநிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினூடாக குவைத் செம்பிறைச் சங்கம் அன்பளிப்பாக வழங்கிய நீர் சுத்திகரிப்பு இயந்திரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

கரவெட்டி அரசினர் வைத்தியசாலையில் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கியின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள வெளிநோயாளர் பிரிவுக்கட்டடத்துக்கு அடிக்கல் நடுகை செய்யப்படும்.

## உதயவாக்கு

சுதந்திரத்தின் உட்கருத்தை அறியாமல் சுதந்திரம் சுதந்திரம் என்று வெறுமனே கூச்சல் போடுவது; அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள ஓர் அடிமையின் சுபாவம்.

- மாஜினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள P4 கணனி Subwofer, Printer என்பவற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 0773107813. (51651)

## கட்டடம் விற்பனைக்கு

நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதிக்கருகில் 2 பரப்புக் காணியுடன் நவீன வசதிகளுடன் கூடிய கட்டடத் தொகுதி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777-271225, (சி-49864)

## தவறிவிட்டது

17.06.2006 அன்று மல்லாகத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் செல்வி கனகசபை ஜந்துயா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (868201258V), இராணுவ அடையாள அட்டை 0906028283 ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் க.ஜந்துயா கலட்டி, ஏழாலை மேற்கு, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (51657)

றக்கா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, மகேந்திரன் ஜொய்சி என்பவரின் (1½ பவுண் முத்துப் பதித்த குருசுடன் கூடிய) தங்கச் சங்கிலி மடத்தடிக்கும் கொட்டடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0776341547 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (51663)

ரெங்கசாமி சுதர்சினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (845181225V), இராணுவ அடையாள அட்டை 0901031460 என்பன தலங்காவில் பிள்ளையார் கோயிலடியில் 28.06.2006 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். நியூகமல் செறமிக், 37, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் T.P. 222 2085 (51668)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

35 நாளில் 2 Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை மருத்துவ ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம் - [illegible] வீதி, பண்டத்தரிப்பு T.P. No. 222 2867, 222 3529 (51663)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972 ஆம் ஆண்டு, 1இல் செவ்வாய், சூரியன், கிரகபாவம் 39, அத்த நட்சத்திரமுடைய பட்டதாரி, (B.A.) ஆசிரியைக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: T.P. 0777286009 (51660)

1977-11-01, கிரகபாவம் 53, உத்தரம் 4 உடைய கனடாவில் வேலை பார்க்கும் மணமகளுக்கு 8இல் செவ்வாய் உள்ள படித்த, அழகான, கிரகபாவம் 53இற்கு மேற்பட்ட இந்து கௌரவ குடும்ப மணமகன் தேவை. தொடர்பு: தர்ஷன் 0779046498. (51676)

## மணமகள் தேவை

1973-03-27, கிரகபாவம் 23, மூலம் 4ஆம் பாதம், உயரம் 5'5'' உடைய லண்டனில் தாதி உத்தியோகத்தராகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த, இந்து கௌரவமான குடும்ப மணமகள் தேவை. பட்டதாரி Or A/L படித்தவர். தொடர்பு: தர்ஷன் 0779046498. (51675)

1977-12-11, கிரகபாவம் 15, அனுஷம், A/L படித்த யாழ். இந்து கௌரவ குடும்ப, கடை வைத்திருக்கும் மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் மணமகள் தேவை. தொடர்பு: தர்ஷன் 0779046498. (51674)

# ஆங்கிலப் பயிற்சி சான்றிதழ்

தென்மராட்சி, ஜூன் 29

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள நிகழ்வில் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

பயிற்சி வகுப்பினைப் பூர்த்தி செய்த அனைத்து மாணவர்களையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

கழகத்தினால் நடத்தப்பட்ட இரண்டு கட்ட ஆங்கிலப் பயிற்சி வகுப்புகளை இலவசமாகக் கற்பித்த லயன் எம்.பீ.சண்முகநாதன், லயன் சீமாட்டி திருமதி உ. சண்முகநாதன் ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (117)

# யூனியன் கல்லூரி மாணவர்களுக்கு

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கல்வி கற்கும் இவ்வருடம் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள தரம் 11 மாணவர்களையும் மாகாணமட்டப் பரீட்சைக்கு தோற்றும் தரம் 9 மாணவர்களையும் விண்ணப்பம் அனுப்புவது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன் சுன்னாகம் கொமர்ஷல் வங்கிக்கு அருகிலுள்ள புனித அந்தோனியார் வீதியிலுள்ள இ.நவகேதீஸ்வரனின் இல்லத்துக்கு வருகை தருமாறு பாடசாலை அதிபர் எஸ்.புண்ணியசீலன் கேட்டுள்ளார். (204)

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் குணரத்தினம்

ஊர்காவற்றுறை, புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், தற்போது வத்தளையில் வசித்தவருமாகிய அம்பலவாணர் குணரத்தினம் 26.06.2006 திங்கட்கிழமை வத்தளையில் காலமானார்.

அன்னார் விமலாதேவியின் அன்புக் கணவரும் அமிழ்தினி (பிரதேச செயலகம், தெல்லிப்பளை), பிரபாகரன் (ஜேர்மனி), ஹரிகரன் (ஜேர்மனி), ஸ்ரீ கரன் (வத்தளை), வரதட்சாயினி (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரன் (ஆசிரியர், அளவெட்டி அருணாசலம் மகாவித்தியாலயம்), தர்மினி (ஜேர்மனி), சுரேந்தினி (கனடா), சிவகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ஷியா (ஜேர்மனி), தனுஷியா (ஜேர்மனி), அனுஷ் (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.06.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வத்தளையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பழ வளவு,
ஏழாலை மேற்கு, (51671)
ஏழாலை. (21.14.19)

தகவல்:
குடும்பத்தினர்.
T.P. 0779064791

# யா/இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

தலைவர்: திரு.அ.சதானந்தன் அவர்கள்
காலம்: 16.07.2006 ஞாயிறு பிற்பகல் 3 மணி
இடம்: கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபம்

அனைத்து அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: புதிதாக அங்கத்துவம் பெற விரும்புவோர் 10.07.2006 இற்கு முன் செயலாளரிடம் விண்ணப்பிக்குமாறும் பிரேரணைகள் கொடுக்க விரும்புவோர் 10.07.2006 இற்கு முன் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

அ.சதானந்தன்
தலைவர்

ந.தவசோதிநாதன்
செயலாளர்

(51667)(21.17.14)



உ

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## விசேட அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு காணிக்கையாக கிடைத்த பட்டுச் சேலைகள் (சாறிகள்) பகிரங்க விற்பனை செய்யப்படவுள்ளது. பெற்றுக் கொள்ள விரும்புவோர் கீழே குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளலாம். என்பதை அறியத்தருகின்றோம்.


காலம்: 02.07.2006 தொடக்கம் 12.07.2006 வரை
இடம்: ஆலய கல்யாண மண்டபம்
நேரம்: தினசரி காலை 10 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை

நன்றியுடன்
அன்னையின் பணியில்

நா.யோகநாதன்
நிறைவேற்று அலுவலர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(சி-49861)(21.17.14)

# ஒவ்வொரு மாணவர்களுக்குமான கல்வித் திட்டம்-2006




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் பாதுகாப்புக் கெடுபிடி மீனவர்கள் தொழில் இன்றி அவதி

கரவெட்டி,ஜூன் 29

கடந்த சில தினங்களாக வடமராட்சி கடற்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதால், கடற்றொழிலாளர்கள் தொழிலுக்கு செல்வதில் பெரும் அசௌகரியங்களை அடைகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடற்பரப்பில், கடற்படையினரின் டோராப் படகுகள் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இதனால் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்பவர்கள், மீன்பிடிக்காது பாதி வழியில் திரும்பி வரவேண்டியுள்ளது. இதனால், மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் அத்துடன் கடற்பகுதியில் உலங்குவானூர்திகளும் வட்டமிட்டுக் கொண் டிருப்பதால் அப்பகுதி மக்கள் அச்சத்துடன் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதலை அடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (70)

## தமிழ் மன்றக் கூட்டம் ஒத்திவைப்பு

அச்சுவேலி,ஜூன்29

யாழ்.கல்வி வலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த தமிழ் இலக்கியமன்ற அங்குரார்ப் பணக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (11)

## மணல் அகழச் சென்றோர் மீது வரணியில் மக்கள் தாக்குதல்

தென்மராட்சி,ஜூன் 29

வரணி, போக்கன் பகுதியில் சட்ட விரோதமாக மணல் அகழச்சென்றவர்களுக்கும் அப்பகுதி மக்களுக்கும் மோதல் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்த மோதலில் மணல் அகழச் சென்ற ஒருவர் பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

பொதுமக்களின் தாக்குதலையடுத்து மணல் அகழச்சென்றோர் இருவாகனங்களைக் கைவிட்டு தப்பியோடிவிட்டனர். பின்னர் அப் பகுதி மக்கள் படையினரின் உதவியுடன் இரு உழவு இயந்திரங்களையும் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். (117)

## புங்குடுதீவுக்குரிய மின்பிறப்பாக்கியை அல்லைப்பிட்டிக்கு மாற்றத் திட்டம்

நல்லூர்,ஜூன்29

புங்குடுதீவில் மின்சார விநியோகம் மேற்கொள்ளவென ஒதுக்கப்பட்ட மின்பிறப்பாக்கி அல்லைப்பிட்டிக்கு மின்சாரம் வழங்கவென எடுத்துச்செல்லப்படவுள்ளதாக புங்குடுதீவு மக்கள் கூறுகின்றனர்.

புங்குடுதீவில் மின்னிணைப்புப் பெற தற்சமயம் குறைந்த எண்ணிக்கையானோரே ஊர்காவற்றுறை மின்சார சபைக்கு விண்ணப்பித்துள்ளனர். ஆனால் புங்குடுதீவுக்கான மின்விநியோகம் ஆரம்பிக்கப்பட்டதும் தமது வீடுகளுக்கான இணைப்பைப் பெற்றுக் கொள்ள மேலும் பலர் ஆயத்தமாக உள்ளனர் என்று கூறப்படுகிறது.

கடந்த பல மாதங்களாக தமது கிராமத்திற்கான மின்விநியோகத்தை தாமதமின்றிச் செயற்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வற்புறுத்தி வந்ததுடன் யாழ்.அரச அதிபரிடம் முறையீடு செய்ததைத் தொடர்ந்து அவர் மேற்கொண்ட நடவடிக்கையால் புங்குடுதீவுக்கான மின்விநியோக வேலைத் திட்டங்கள் துரிதமாக்கப்பட்டன என்றும் புங்குடுதீவுப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பொருத்தமில்லாத காரணங்களைக் காட்டி மின்சாரத்தை வழங்க மின்சார சபை தற்போது பின்னடிப்பதாகவும்- மினிவிநியோகம் இடம்பெறத் தொடங்கியதும் அனேகர் தமது வீடுகளுக்கு மின் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ளவுள்ளனர் எனவும் - அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். (111)



நவாலி மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் மாணவர்கள் 'பாண்ட்' வாத்திய இசையுடன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சிறுவர் பாதுகாப்பு நிதியத் திட்டப் பணிப்பாளர் எ.பேரின்பநாதன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலையின் முன்னாள் அதிபர் ஏ.அலெக்சாண்டர் ஆகியோரை அழைத்து வருவதைப் படத்தில் காணலாம்.

பாடசாலைக்கான 'பாண்ட' இசை வாத்தியக் கருவிகளை சிறுவர் பாதுகாப்பு நிதியம் அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(படம்: நவாலிச் செய்தியாளர்)

## சமயசந்நிதிகளில்...

யாழ்ப்பாணம்,ஜூன்29

கொக்குவில் மேற்கு சொர்ணவடலி ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுதினம் முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்29

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (204)

## மருத்துவ நிபுணரை நியமிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்29

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் (மந்திகை) நிரந்தர சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரை நியமிக்குமாறு வடமராட்சி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த வைத்தியசாலையில் உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் பணியாற்றிய இந்திய மருத்துவ நிபுணர் 7 மாதங்களின் முன்னர் தாயகம் திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகாகும்பாபிஷேகம்

நல்லூர்,ஜூன்29

நெடுந்தீவு மத்தி, பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு கிரியாரம்பமும் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் மறுநாள் சனிக்கிழமை பகல் 12 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மகாகும்பாபிஷேக விழாவும் இடம்பெறவுள்ளன.

அன்றையதினம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகளின் அருளுரையும் 1008 சங்காபிஷேகம், அன்ன தானம் என்பனவும் இடம்பெறும்.(111)

## மூவரைக் காணவில்லையென மனித உரிமைக் குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்29

காணாமற்போனார்கள் என்று கருதப்படும் மூன்று பேர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அல்வாய் வடக்கு, அல்வாயைச் சேர்ந்த வரும் பருத்தித்துறை நகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளியுமான சுப்பிரமணியம் சுரேஸ் (வயது - 18) என்பவர் கடந்த 21ஆம் திகதி வேலைத்தளத்திற்குச் சென்றார் என்றும் -

அதன்பின்னர், இவர் வீடு திரும்பவில்லை என்றும் - அவரது சகோதரர் முறைப்பாடு செய்துள்ளார்.

புத்தூரைச் சேர்ந்த - ஒரு பிள்ளையின் தந்தையான - அபிமன்யு யோகேந்திரன் (வயது - 25) என்பவர் கடந்த 22ஆம் திகதி காணாமற்போயுள்ளார் என்று அவரது மனைவி முறைப்பாடு செய்துள்ளார். திருநகர் பகுதியைச் சேர்ந்தவரான ஆறுமுகம் ஜெகதீஸ்வரன் (வயது - 20) என்பவர் வீட்டிலிருந்து சாவகச்சேரிக்கு சென்றார் என்றும் -

அதன் பின் அவர் வீடு திரும்பவில்லையென்றும் - அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (190)

## சுயதொழில் உதவித்திட்டம்

அச்சுவேலி,ஜூன்29

புத்தூர் குருநாதர் கோயிலடியைச் சேர்ந்த 21 குடும்பங்களுக்கு சுயதொழில் வாய்ப்பாக நிக்கொட் நிறுவனத்தின் உதவியுடன் பசுக்கள், ஆடுகள், கோழிக் குஞ்சுகள் ஆகியவை வழங்கப்பட்டன.

10 குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சுகளும் 7 குடும்பங்களுக்கு நல்லின ஆடுகளும் 4 குடும்பங்களுக்கு பசு மாடுகளும் வழங்கப்பட்டன.

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரியின் சிபார்சில் பயனாளிகளுக்கு ஆடு, மாடு, கோழி என்பன வழங்கப்பட்டதாகவும்- ஆடு மற்றும் மாடு தலா ஒவ்வொன்றும், கோழி குடும்பத்திற்கு 10 வீதமும் வழங்கப்பட்டதாகவும்-

கோப்பாய் கால்நடை வைத்திய பிரிவு போதனாசிரியர் எஸ்.சத்தியவாகேஸ்வரன் தெரிவித்தார். (11)




## கரவெட்டியில் குடிகாரர் தொல்லை; வீதியில் பயணம்செய்வோர் அசௌகரியம்

கரவெட்டி,ஜூன் 29

கரவெட்டி மற்றும் நெல்லியடிப் பகுதிகளில் மாலை நேரங்களில் குடிகாரர் தொல்லை அதிகரித்து வருகிறது. இதனால் இப்பகுதியில் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை அடைகின்றனர்.

தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலையில் வர்த்தக நிறுவனங்கள் பிற்பகலிலேயே மூடப்பட்டுவிடுகின்றன.

இந்தவேளையில், பல்வேறு பகுதிகளிலும் இருந்து மதுப்போத்தல்களுடன் வருவோர் பூட்டப்பட்ட கடைகளுக்கு முன் கூட்டமாகக் குடித்து மகிழ்கின்றனர். அத்துடன், வீதிகளில் பயணம் செய்வோர் மீது போதையில் தகாத வார்த்தைகளைப் பிரயோகிக்கின்றனர்.

இதனால் இந்த வீதியில் பயணம் செய்யும் சிறுவர், பெண்கள் உட்படப் பலரும் சிரமம் அடைகின்றனர்.

பல பிரதேசங்களுக்கு செல்லும் பிரதான வீதியில் இருந்து குடிகாரர்கள் செய்யும் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (204-70)

## மதத் தலைவர்களை அமைச்சர் இன்றும் நாளையும் சந்திக்கிறார்

யாழ்ப்பாணம்,ஜூன்29

குடாநாட்டில் உள்ள அனைத்து மதங்களையும் சேர்ந்த பிரமுகர்களை இன்றும் நாளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்திக்கவுள்ளார். சமூக நலத்துறை அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநட்டில் உள்ள அனைத்து மதங்களையும் சார்ந்த வழிபாட்டு ஸ்தலங்களை மேம்படுத்தும் நோக்கில் உரிய திட்டங்கள் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும், சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும் யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தற்போது மேற்கொண்டு வருகிறார்.

இதன் நிமித்தம் யாழ்.குடாநாட்டில் உள்ள அனைத்து மதங்களையும் சார்ந்த வழிபாட்டு ஸ்தலங்கள் மற்றும் மதம் சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளை அமைச்சர் இன்றும் நாளையும் தனது யாழ்.அலுவலகத்தில் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே இந்து, சமய கலாசார அலுவல்கள் அமைச்சராக இருந்தபோது யாழ்.குடாநாட்டில் இந்து சமய வழிபாட்டு ஸ்தலங்கள், நிறுவனங்கள் உட்பட ஏனைய மதங்களினதும் வழிபாட்டு ஸ்தலங்கள் மற்றும் கலாசார வளர்ச்சிக்காகவும் பல உதவிகளை மேற்கொண்டு வந்துள்ளதுடன் பல்வேறு திட்டங்களையும் செயற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ள மேற்படி சந்திப்புக்களின் பின்னர் குடாநாட்டில் மத வழிபாட்டு ஸ்தலங்கள் மற்றும் மத நிறுவனங்கள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் வெகு விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும் - என்றுள்ளது.



சமூகசேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீவகப் பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்து அங்குள்ள மக்களைச் சந்தித்தார். நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவுடன் படைத் அதிகாரிகள் மற்றும் பொலீஸார் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி விஞ்ஞான ஆசிரியர்
## திரு. நடராசா காளிதாசன் அவர்களின்
# சேவைநலன் பாராட்டும் மலர்

### மூன்று தசாப்தங்களாகச் சிறப்புறப் பணியாற்றியவர்

புகழ்பூத்த மகாஜனக் கல்லூரியின் வளர்ச்சிக்காக கடந்த மூன்று தசாப்தங்களாகச் சிறப்பாகப் பணியாற்றிய மூத்த விஞ்ஞான ஆசிரியர் திருமிகு நடராசா காளிதாசன் அவர்கள் அகவை அறுபதில் ஓய்வுபெறுவதையிட்டு கல்லூரிச் சமூகத்தினரால் வெளியிடும் சேவைநலன் பாராட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

மகாஜனாவில் இரண்டு பரம்பரையினருக்கு சிறப்பாக விஞ்ஞான பாடத்தினைப் போதித்ததுடன் இளம் ஆசிரியர்களின் சந்தேகங்களைப் போக்கக் கூடிய வல்லமை படைத்தவராகவும் இருந்தார். இவர் மாவட்ட ரீதியில் விஞ்ஞானத்துறை வளர்ச்சிக்காக பல நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றியவர்.

விளையாட்டுத் துறையில் குறிப்பாக மகாஜனா சதுரங்கத்தில் முன்னணி வகிக்க இவரது பங்கு சிறப்பானது. ஸ்கந்தவின் புகழ்பூத்த பழைய மாணவனான இவரது தந்தையாரும் சிறந்த தமிழ் ஆசானாக ஸ்கந்தாவில் நீண்ட காலம் பணியாற்றியவர்

ஓய்வு பெறும் இவர் நீண்ட காலம் தனது குடும்பத்தினருடன் சிறப்பாக வாழ இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

**ப. விக்னேஸ்வரன்** *வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம் கல்விவலயம்.*

### கணித, விஞ்ஞான பட்டதாரிகள் உருவாகக் காரணமானவர்

விஞ்ஞானபாடம் கற்பிப்பதில் ஆசிரிய மணியாகத் திகழ்ந்தவர் திருவாளர் நடராசா காளிதாசன் அவர்கள். கல்லூரியிலும் சரி விஷேட வகுப்புகளிலும் சரி கற்பிப்பதில் தனக்கென ஒரு விஷேட பாணியைக் கொண்டு அப்பணிப்புடன் திகழ்ந்தவர். கணித விஞ்ஞான பட்டதாரிகள் பலர் உருவாக அத்திபாரமாக இருந்தவர். 30 வருடங்கள் தொடர்ச்சியாக இக் கல்லூரியில் சேவையாற்றி ஓய்வுபெறுகின்ற இவ்வாசிரியரை உளமார வாழ்த்துவதில் மிகவும் உவகையுறுகிறேன்.

ச.கைலாசநாதன்,
*கோட்டக்கல்விப்பணிப்பாளர், தெல்லிப்பழை.*

### ஆசிரியர்களுக்கு முன்மாதிரியானவர்

மகாஜனக் கல்லூரி பல களங்களில் முதன்மை நிலையை அடைந்தமைக்கு ஆசிரியப் பெருந்தகைகள் முன்னோடியாக இருந்துள்ளார்கள். அவ்வாசிரியர்களின் அறிவும் ஆற்றலும் ஊக்கமும்தான் மாணவர்கள் பல வெற்றிகளையும் சிறப்புகளையும் மகாஜனாக் கல்லூரிக்கு ஈட்டிக்கொடுக்கக் கூடியதாக இருந்தது. அவர்களுள் ஒருவர்தான் முப்பது வருட ஆசிரிய சேவையிலிருந்து இன்று ஓய்வுபெறும் ஆசிரியர் திரு.நடராஜா காளிதாசன் அவர்கள். 1976 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை 30 வருடங்கள் இக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றியவர். இக்கல்லூரியில் சிறந்த விஞ்ஞான ஆசிரியராக, பாட இணைப்பாளராக, பகுதித் தலைவராக, விளையாட்டுத்துறை செயலாளராக, பரீட்சை பகுதிப் பொறுப்பாளராக, விஞ்ஞானக் கழகம், சதுரங்கக் கழகம் ஆகியவற்றின் பொறுப்பாசிரியராக இருந்து தம் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி முத்திரை பதித்தவர்.

பாடசாலைக்கு ஒவ்வொருநாளும் முதலில் வந்து ஏனைய ஆசிரியர்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் மாணவர்கள் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்தில் மிகச் சிறந்த பெறுபேறுகள் பெறுவதற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர். தர்க்க ரீதியாக மாணவரின் சிந்தனா சக்தியை தூண்டும் வகையில் கற்பித்தலில் மிக வல்லவர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு துறைகளிலும் கடமையாற்றும் மாணவர்களின் பற்றுக்கும் மதிப்புக்கும் உரியவராகப் போற்றப்படுபவர்.

கல்விச் சமூகமே நன்மைபெறும் பொருட்டு தந்தையாரின் நினைவு தினத்தையொட்டி பல கருத்தரங்குகளை ஒழுங்கமைத்து நடத்திய பெருமைக்குரியவர். ஆசிரியர் அவர்களது ஓய்வுகாலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து அமைகின்றேன்.

**பொ.சுந்தரலிங்கம்,**
*அதிபர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை*



| | |
|---|---|
| **தந்தை:** | வல்லிபுரம் நடராசா |
| **தாய்:** | நடராசா மனோன்மணி |
| **பிறந்த ஊர்:** | குரும்பசிட்டி, தெல்லிப்பழை |
| **பிறந்த திகதி:** | 30.06.1946 |

**கல்வி பயின்ற பாடசாலைகள்:**
குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம்
குரும்பசிட்டி பொன் பரமானந்த வித்தியாலயம், மகாஜனாக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்.

**கல்வி புகட்டிய பாடசாலைகள்:**
புஸ்சல்லாவை CCTMS 1967 - 1969
களுத்துறை முஸ்லிம் மகாவித்தியாலயம் 1970 - 1974
களுத்துறை சென்.ஜோன்ஸ் மகா வித்தியாலயம் 1975
மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை 1976 - 2006

**சிறப்புத்துறைகள்:** விஞ்ஞானம், சதுரங்கம், மெய்வல்லுனர்த்துறை, உதைபந்தாட்டத்துடன் கணனி.

**சேவையை வாழ்த்தி நிற்பவர்கள்**
அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், விஞ்ஞானக் கழகம், பழைய மாணவர் சங்கம்.

**அனுசரணை:**
மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்.

### அதிபர், ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் கல்விச் சேவையுடன் விளையாட்டுத்துறையிலும் தம்மை அர்ப்பணித்த ஆசான்களின் வரிசையில் ஆசிரியர் திருவாளர் நடராசா காளிதாசன் அவர்களுக்கு மதிப்பான ஓர் இடம் உண்டு. தனக்கு வழங்கப்பட்ட உன்னதமான பணியை செவ்வனே செய்த ஒருவராக நாம் இவரைக் காண்கின்றோம். தனது கடமையை சிறப்பாக ஆற்றி பெருமை பெற்றார்.

''பெருமைக்கு மேனைச் சிறுமைக்குத் தத்தங்
கருமமே கட்டளைக் கல்''.

என்பது திருவள்ளுவர் வாக்கு. தனது கருமம் ஆகிய ஆசிரியர் பணியை உரிய முறையில் ஆற்றி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் நன் மதிப்பைப் பெற்றார். விஞ்ஞான பாடத்தை விளக்கத்துடன் கற்பித்து மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை அடைய வழிகாட்டினார். தொடர்ந்து முப்பது வருடங்கள் விஞ்ஞான ஆசிரியராகப் பணி ஆற்றியதுடன், விளையாட்டுத்துறைச் செயலாளராக, பகுதித் தலைவர் பதவியையும் வகித்து அகவை அறுபதில் ஓய்வுபெறும் ஆசான் திருவாளர் நடராசா காளிதாசன் அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன், அவர் மேலும் பல செளபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல துர்க்கை அம்மனைப் பிரார்த்திக் கின்றோம்.

க.ரவிந்திரா
*செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை.*

### கூடிகார முள்ளாக......

திரு.நடராசா காளிதாசன்அவர்கள் தனது ஆசிரிய சேவைக்காலத்தில் அதிகபட்ச காலமாக 30 வருடங்களை 'மகாஜனா' வின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்த பின்னர் ஓய்வுக்கு வந்திருக்கிறார். 1976 முதல் இன்றைய கால வரையான அவரின் சேவை அளப்பரியது. அளவுக்கு அதிகமாக யாருடனும் பழகும் சுபாவம் இல்லாதவர் போல காணப்பட்டாலும், ஒருமுறை இவருடன் பழகும் சந்தர்ப்பத்தைப் பெற்றவர்கள் இவரை மறக்காதிருக்க கூடியவிதமாகச் கவர்ந்து கொள்வார். ஆர்ப்பாட்டமின்றி அமைதியான வழியில் யதார்த்தமாகச் சிந்தித்துச் செயலாற்றும் குணமுடையவர். எந்தவொரு சொல்லுக்கும் - செயலுக்கும் பல கோணங்களிலிருந்து சிந்தித்து செயலுருகொடுக்க வேண்டும் என்பதை உணரவைக்கும் கொள்கையுடையவர். நினைத்த ஒரு இலக்கை அடைவதற்காக பொறுமையாய், நிதானமாய் காத்திருக்கும் இயல்பு கொண்டவர்.

விஞ்ஞானத்துறை செயற்பாடுகளுக்கு மேலதிகமாக மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு வித்திடும் ஒரு விளையாட்டான சதுரங்கத்துறையை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். மாணவர்களின் நலன்களில் அதிக அக்கறை கொண்டு செயற்பட்டவர்.

திரு.காளிதாசன் அவர்கள் முழுமையாகவும் ஓய்வின்றியும் சேவையாற்றி ஓய்வுபெறுவது காலத்தின் நியதி. ஆயினும் இவரது பிரிவு கல்லூரியின் வளர்ச்சிப் படியில் ஒரு பாரிய இடைவெளிதான். எனினும் இவரது ஆலோசனைகள் கல்லூரிக்குத் தொடர்ந்தும் கிடைக்கும் என்று நம்புகின்றோம்.

இவர் பல்லாண்டு காலம் மகிழ்ச்சியுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| | பா.கிருபாகரன், |
| *பழைய மாணவர் சங்கம்,* | *சி.தேவகுமாரன்,* |
| *தெல்லிப்பழை.* | *இணைச் செயலாளர்கள்.* |

### தன்னலமற்ற சேவையாளன்

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற எவரும் இறைவனை நினைத்தல் தலையாய கடமையாகும். இப்பிறவியில் இறைவனை அடையவே நாம் மனிதராக பிறந்திருக்கிறோம். இப்பூவுலகில் வாழும் காலத்தே மனித சமுதாயத்துக்குச் சேவை செய்தல் மிகமிக அவசியம். சேவையின் மூலம் நமது உள்ளம் தூய்மையடைகிறது. இவ்வகையில் உயர் திரு. ந. காளிதாசன் அவர்கள் கல்விக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய சேவை அளப்பரியது.

''தெளிந்த அறிவும் சிறந்த இன்சொல்லும்
மலர்ந்த முகமும் உயர்ந்த உள்ளமும்
என்றும் எதையும் சாதிக்கும்''

இதற்கு எடுத்துக்காட்டாக இவர் விளங்குகின்றார். பண்பான உள்ளமும் அமைதியான போக்கும் கம்பீரமான தோற்றமும் எதையும் நேருக்கு நேர் பேசும் சுபாவமும் உடைய இவர் மாணவரைக் கொண்டே மாணவரிடம் உயர்வான எண்ணங்களை வளர்த்தெடுத்தார்.

இக்கல்லூரியின் வளர்ச்சியில் தன்னை 30 வருட காலம் அர்ப்பணித்து, சேவையாற்றி துறை சார்ந்த விற்பன்னர்களை உருவாக்கி இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் இலங்கையின் பல பாகங்களில் மட்டும் அன்றி, உலகின் பல பாகங்களிலும் பரந்துபட்டு சிறப்புடன் வாழ்ந்து ஒளியூட்டுபவர்களாகத் திகழ்கின்றனர்.

''பிறர்க்கென வாழ்பவனே வாழ்கின்றான்'' என்பது சுவாமி விவேகானந்தரின் அருள் வாக்கு. தனக்கென வாழ்வது எளிது. ஆனால் அதில் எந்தச் சிறப்புமில்லை. பிறர்க்கென ஒருவர் செய்யக் கூடிய சிறிய தியாகமும் அவரை மேன்மையுறச் செய்கிறது. இவர் ஒரு தன்னலமற்ற சேவையாளர். சேவையின் இறுதிக்காலம் வரை தனது உடல் நலனையும் பொருட்படுத்தாது, மாணவர்களின் நலனுக்காக கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்தார். அகவை அறுபதில் அரைப்பகுதியை கல்விப் பணிக்காக அர்ப்பணித்த அவரது சேவை பலரது நன்மதிப்பைப் பெற்றுள்ளதெனலாம்.

எமது கல்லூரியின் சுடர்த்தீபமாக, உதாரண புருஷனாக, விஞ்ஞான சிந்தையுள்ளவராக, சதுரங்க விற்பன்னராக, நிர்வகிக்கும் திறனுடையவராக, கலையை இரசிப்பவராக, விளையாட்டு வீரனாக, கணனி ஆர்வலராக எதையும் ஆராய்ந்தறியும் திறன் படைத்தவராக, மாணவர்கள் மத்தியில் அன்புடன் பழகிக் கவரப்பட்டவராக, தனித்துவம் வாய்ந்தவராக பாடசாலையின் நடுநாயகமாகத் திகழும் ஒரு சேவையாளரின் ''சேவை மூப்பு'' எனும் காலத்தின் தேவையால் ஓய்வுபெற்றுச் செல்வதைத் தடுக்கமுடியாது இது எமது பாடசாலைக்கு பெரும் இழப்பேயாகும். எனினும் அவரது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகள் காலம் காலமாகப் போற்றப்படவேண்டியதொன்றாகும்.

எமது பாடசாலையின் உதாரண புருஷனாகத் திகழும் திரு.ந.காளிதாசன் அவர்களும் அவரது குடும்பத்தவரும் ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழ வாழ்த்துகின்றோம். மேலும் பெருமைக்கு தங்கள் பணிதொடர, இறைவனின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

**ஆசிரியர் கழகம், மகாஜனக் கல்லூரி.**

### விஞ்ஞான மன்றத்தின் உள்ளத்திலிருந்து

எமது ஆசான் திரு.நடராசா காளிதாசன் அவர்கள் மணிவிழாக் காணும் நாள்தான் ஆசிரியர் சேவையை எமது கல்லூரிக்காக அர்ப்பணித்து குறைந்தது ஒரு குடும்பத்தின் மூன்று தலைமுறைகளுக்காவது அறிவூட்டிய பெருமை ஆசான் அவர்களைச் சாரும்.

ஒவ்வொரு மாணவரும் ஆண்டு தொடக்கத்தில் காளிதாசன் ஆசிரியர் தமது வகுப்புக்கு விஞ்ஞான ஆசிரியராக வரவேண்டும் என்று ஏங்கியதையும் அதை அறிய அலைந்து திரிவதையும் விஞ்ஞான மன்றம் பார்த்து வியந்ததுண்டு. ஏன் இந்த அங்கலாய்ப்பு என்றால் அதற்குரிய விடை அவருடைய தரமான கற்பித்தல், நவீன முறைக் கற்பித்தல், தர்க்கரீதியான அறிவூட்டல், தோழமையான அணுகுமுறை, கண்டிப்பான வெளிப்பாடு, பாசத்துடனான ஊக்குவிப்பு, மகிழ்ச்சியான கணிப்பு இவ்வாறு கூறிக்கொண்டேபோகலாம்.

பாடசாலை மட்டத்தில் விஞ்ஞான கண்காட்சிகள் நடைபெறும் போதோ கணனியில் கற்ற விடயங்களை கற்பிக்கும் போதோ மேன்தலை எறியில் கற்றலை ஊக்குவிக்கும் போதோ அவருடைய ஆளுமைத்திறன்கள் வெளிப்படுவதை விஞ்ஞானமன்றம் உன்னிப்பாக அவதானித்திருக்கின்றது; மகிழ்ந்திருக்கின்றது என்பது மிகையல்ல.

மாணவர்களுடன் மட்டும் அவரின் தொழிற்பாடு நின்று விடவில்லை. ஆசிரிய சமூகத்திற்குள்ளும் தன் முத்திரையைப் பதித்திருக்கிறார். குறிப்பாக ஆசிரிய வாண்மை விருத்திச் செயற்பாடுகள் ஆகும். மேன்தலை எறியி கற்பித்தலுக்காக அதைக் கையாளும் முறை, கணிப்பீட்டு முன்னாயத்த கருத்தரங்குகள், கணனிப் பயிற்சி கருத்தரங்குகள் போன்ற பல நிகழ்வுகளைத் தன் தந்தையாரின் ஞாபகார்த்த கருத்தரங்குகளாக பல வளவாளர்களை தன் செயலிலேயே அழைத்து நடத்தியது ஆசிரிய வள அபிவிருத்தியில் அவர் கொண்ட அக்கறையே என்பதை விஞ் ஞான மன்றம் பலமுறை பார்த்தும் கேட்டும் வியந்திருக்கின்றது. இதற்கான பின்புலம் அவருடைய தந்தையின் பரம்பரையலகு புகுத்தல் எனக் கூறினார். ஆசிரியரின் ஆளுமை குறைந்துவிடாது நவீன பிறப்புரிமை தொழில்நுட்பம் இறைவனால் தந்தையிடமிருந்து மகனுக்கு கடத்தப்பட்டுள்ளது. ஏனெனின் ஆசிரியரின் தந்தையார் பாடப் புத்தகங்கள் வெளியீட்டு குழுவில் இருந்து செயற்பட்டார். அந்நாளில் மாணவர்களுக்கு எளிமையான விளங்கக்கூடிய நடையிலே புத்தகங்களை வெளியிட கருமமாற்றியவர் 'தந்தை எவ்வழி மகன் அவ்வழி' என்பதை விஞ்ஞான மன்றம் நன்குணர்கின்றது.

ஆசிரியர் அவர்கள் கல்விச் சமூகத்திற்கு இன்னும் தன்னை அர்ப்பணிக்க அவரை நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறோம்.

**விஞ்ஞானமன்றம்-2006**

### விஞ்ஞானத்தின் தந்தை

மகஜன அன்னைக்கு அளப்பெரும் சேவையாற்றி மாண்புடன் விஞ்ஞானத்தின் தந்தையாய் மகிழ்வுடன் விளையாட்டுத்துறையினிலே பங்காற்றிய எம் ஆசான் நடராசா காளிதாசன் சீர்பெற்று யர் மாணவர் சமூகமதை உருவாக்க ஐயாறு வருடமாய் ஆசிரியத் தவத்தில் ஒன்றிணைந்தே அகவை அறுபதில் தடம்பதித்த இத் திருநாளில் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ்கவென மன மகிழ்ந்து அகம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

**மகாஜன மைந்தன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் 170 நிரந்தர வீடுகள் கையளிப்பு

வட்டக்கச்சி,ஜூன்29

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகிய கிராமங்களில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அமைக்கப்பட்ட 170 நிரந்தர வீடுகள் உரியவர்களுக்குக் கையளிக்கப்பட்டன.

இந்த வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு கடந்தவாரம் இடம்பெற்றது.

கட்டைக்காட்டில் 'சோஆ' நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 90 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு காலை இடம்பெற்றது. வெற்றிலைக்கேணியில் 'கியூடெக்' நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 80 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு முற்பகல் இடம்பெற்றது.

இந்த வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வுகளை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆரம்பித்துவைத்தார்.

இந்த நிகழ்வுகளில் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, 'சோஆ', 'கியூடெக்' நிறுவனப் பிரதிநிதிகள் உட்படப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

மக்களுக்கு வழங்கப்பட்ட 170 வீடுகளும் தலா ஏழு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் குறித்த நிறுவனங்களால் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-405-352)

# புதுக்குடியிருப்புத் தபாலகத்தை நகரில் இயக்க வேண்டுகோள்

புதுக்குடியிருப்பு, ஜூன்29

புதுக்குடியிருப்புத் தபாலகம் நகரப்பகுதியிலிருந்து விலகி தொலைவில் உள்ளதால் பொதுமக்கள் தமது அஞ்சலகத் தேவைகளை நிறைவேற்றுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று கூறப்படுகிறது.

இத்தபாலகம் முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு வீதியில் நகரப் பகுதியிலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவிலுள்ளது.

இதேவேளை- நீதிமன்றம், உதவி அரச அதிபர் பணிமனை போன்றவை நகரப்பகுதியில் உள்ளன. பல்வேறு தேவைகளுக்காக நகரப்பகுதிக்கு வரும் பொதுமக்கள் அஞ்சலகத் தேவைக்காக நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ளது.

இது குறித்து தனது பெயரை வெளியிட விரும்பாத ஒருவர் கூறுகையில், தபாலகத்தில் 5 ரூபா முத்திரை வாங்குவதற்காகப் பஸ்ஸிற்குக் காத்திருந்து 5 ரூபா கட்டணம் செலுத்திச்செல்லவேண்டியுள்ளதாகவும் இல்லாவிட்டால் தாம் வெயிலில் நடந்து செல்ல நேரிடுவதாகவும் கூறினார்.

வள்ளிபுனம், தேவிபுரம், இரணைப்பாலை, கோம்பாவில், வேணாவில், மண்ணாகண்டல் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இத்தத் தபாலகத்தையே அஞ்சல் தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றனர்.

இந்த நிலையில் இத்தபாலகத்தை நகரப் பகுதியில் இயக்க உரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளவேண்டுமெனப் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (353)

# மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன

பரந்தன்,ஜூன்29

முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் 2ஆம் கட்டமாக ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மேலும் 14 மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதிய நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைப் பணிப்பாளரின் அனுசரணையுடன் இந்த வலைகள் வழங்கப்பட்டன.

கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் திட்ட இணைப்பாளர் மீன்பிடி உபகரணங்களை வழங்கினர். (203-352)

# நீரில் மூழ்கி சிறுவன் மரணம்!

வட்டக்கச்சி, ஜூன்29

குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவன் குளத்தில் மூழ்கி மரணமான பரிதாபகரச் சம்பவம் கடந்த 24ஆம் திகதி கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்தில் இடம்பெற்றது.

இரணைமடு - சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த 10 வயதுடைய விஜயகுமார் பிரகாஸ் என்ற சிறுவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார். இவர் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலய தரம் 5 மாணவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

குளிப்பதற்காக சகோதரர்களுடன் கனகாம்பிகைக் குளத்திற்குச் சென்ற சிறுவன் குளக்கட்டின் மேல் இருந்து குளத்தினுள் பாய்ந்தபோது குளத்தினுள் சேற்றில் சிக்குண்டதாகவும் - இதனைக் கண்ட சகோதரர்கள் அலறிக் குரல் எழுப்பியதாகவும் - இதனையடுத்து அங்கு வந்தவர்களால் சிறுவன் சேற்றிலிருந்து மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையில் நடைபெற்ற பிரேதப் பரிசோதனையின் பின் நீரில் மூழ்கியதன் காரணமாக ஏற்பட்ட மூச்சுத் திணறலினால் மரணம் ஏற்பட்டதாகக் கிளிநொச்சி மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி வைத்தியர் கே.திருலோகமூர்த்தி தீர்ப்பளித்தார்.(203- 405)

# போக்குவரத்துக் குறித்து கருத்தூட்டல்கள்

வட்டக்கச்சி, ஜூன்29

தமிழீழ காவல்துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவினரால் பாடசாலைகள் தோறும் வீதிப் போக்குவரத்து விதிகள் குறித்த கருத்தூட்டல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 23 ஆம் திகதி கிளிநொச்சி பாரதி வித்தியாலத்தில் இக் கருத்தூட்டல் நிகழ்வுகளில் ஒன்று பாடசாலை முதல்வர் க.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ காவல்துறையில் நகரப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் ஐ.சிவராசா, துணைப்பொறுப்பாளர் அ.அஜந்தன் ஆகியோர் வீதி ஒழுங்குமுறைகள்தொடர்பான கருத்தூட்டல்களை வழங்கினர். (203- 405)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன கிளை முல்லையில் திறப்பு

வட்டக்கச்சி, ஜூன்29

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் கடந்த 21 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு தெற்கு கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இச்செயலகத்தில் திருமதி கெ.தயாழினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் செயலகக் கட்டடத்தினை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நடமாடும் மருத்துவ சேவை வைத்தியர் சுகுமார் நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் உளநலப் பணியாளர்கள், சமூக வலுவூட்டுநர்கள் ஆகியோரின் கருத்துரைகளும் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வாழ்ந்துவரும் மக்களின் நலவாழ்வினை மேம்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் தனது செயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் இம்மாவட்ட செயலகம் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-405)

# சிபார்சு செய்யப்பட்ட இரசாயன மருந்தை களைக்கட்டுப்பாட்டுக்குப் பயன்படுத்துக!

## விவசாயத் திணைக்களத்தினர் அறிவுறுத்து

பரந்தன்,ஜூன்29

முல்லைத்தீவில் களைகளைக்கட்டுப்படுத்துவதற்குச் சிபார்சு செய்யப்பட்ட இரசாயன மருந்துவகைகளையே பயன்படுத்த வேண்டும் என்று விவசாயத் திணைக்களத்தினர் விவசாயிகளிடம் கேட்டுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்: -

விவசாயிகள் பயிர் உற்பத்தியின் போது களைக்கட்டுப்பாட்டுக்குப் பல்வேறு இரசாயன மருந்துகளைப் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த உற்பத்திப் பொருள்களுக்கும் சிபார்சு செய்யப்பட்ட இரசாயன மருந்துகளையே பயன்படுத்தவேண்டும்.

சிபார்சு செய்யப்படாத மருந்தைப் பயிர் உற்பத்தியின் போது பயன்படுத்துவது தவறான நடைமுறையாகும்.

களைகளைக் கட்டுப்படுத்துவதற்கென ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு களைநாசினி சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

சிபார்சு செய்யப்படாத மருந்துகளை களை அழிப்புக்கென விசிறும்போது பயிர் பாதிக்கப்படாமல் இருந்தாலும் எதிர்பார்த்தளவிற்கு முழு அளவிலான விளைவையும் உற்பத்தியாளர்கள் பெறமுடியாது.

எனவே, விவசாயப்போதனாசிரியர்களின் ஆலோசனைப்படி இரசாயன மருத்துகளைப் பாவனைசெய்து அதிகவிளைச்சலைப் பெறுவதுடன், மண்வளத்தையும் பாதுகாக்க விவசாயிகள் முன்வரவேண்டும் என மேலும் கேட்டுள்ளனர். (203-352)

# 'தாயகம் நோக்கிய பயணம்' திரைப்படம் வெளியீடு

வட்டக்கச்சி, ஜூன்29

'தாயகம் நோக்கிய பயணம்' எனும் பெயரிலான தமிழ் மொழியாக்க திரைப்படம் ஒன்று கடந்த 25 ஆம் திகதிகள் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ரதன் கலையகத்தினரால் இத்திரைப்படம் வெளியிடப்பட்டது.

யூதர்கள் தமது தாயகத்திற்கு திரும்புவதைச் சித்திரிக்கும் திரைப்படம் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இவ் வெளியீட்டு நிகழ்வு ரதன் கலையத்தில் இடம் பெற்றது. (203- 405)

# சுயதொழிலை ஊக்குவிப்பதற்கு நல்லின பசுக்கள் வழங்கப்பட்டன

சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய நிறுவனத்தின் நிதி உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பசுமைப் புரட்சிக்கான நிறுவனத்தால் நல்லின பசுக்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

தருமபுரம் மேற்கு, உழவனூர் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட இருபது பயனாளிகளுக்கே இப்பசுக்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இப்பசுக்கள் அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் உழவனூர் பொது நோக்கு மண்டபத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கண்டாவளைப் பிரதேச இணைப்பாளர் நா.காசிநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் மு.செந்தில் ஏற்றிவைத்தார்.

கருத்துரைகளைக் கால்நடை வைத்தியர், செயற்கைமுறைச் சினைப்படுத்தல் திட்ட இணைப்பாளர், பசுமைப்புரட்சிக்கான நிறுவன கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களால் பசுக்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (203-405)

# விளையாட்டு நிகழ்வு

வட்டக்கச்சி, ஜூன்29

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் இயங்கிவரும் 'குமா' சிறுவர் பூங்காவின் சிறார்களின் விளையாட்டு விழா நிகழ்வு கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது.

சிறுவர் பூங்காவின் நிர்வாகி திருமதி நிமலாவதி விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னதாக சிறார்களின் 'பாண்ட்' வாத்திய அணி வகுப்புடன் விருந்தினர்கள் நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்டனர். சம்பிரதாய பூர்வ நிகழ்வுகளை அடுத்து சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.முகுந்தன், தமிழீழ ஊடக வளர்ச்சிப் பொறுப்பாளர் கந்தம்மான் உட்டப் பலர் கலந்துகொண்டனர். (203- 405-352)

# செயல்திறனை மேம்படுத்தும் நோக்குடன் அரச ஊழியருக்குக் கணனிப் பயிற்சி

புதுக்குடியிருப்பு, ஜூன்29

முல்லைத்தீவு மாவட்ட அரச அலுவலர்களின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்குடன் கணனிப்பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு கே.எஸ்.கே. தனியார் கணனிப்பயிற்சி நிலையத்தால் முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர் க.பார்த்தீபன் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தால் 'கற்றப்' திட்டத்தின்கீழ் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஐந்து நாள்கள் தொடர் பயிற்சியாக ஒவ்வொரு பிரிவினருக்கும் பயிற்சிகள் கட்டங்கட்டமாக வழங்கப்பட்டுவருகின்றன. மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்கள், அலுவலக நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் என அனைவரும் கணனிப்பயிற்சி பெற்று வருகின்றனர். ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்திலும் இப் பயிற்சிநெறி நடத்தப்பட்டு வருகின்றது எனவும் பிராந்திய ஆணையாளர் இ.ஐயாத்துரை தெரிவித்துள்ளார்.(203-353-352)






புதுக்குடியிருப்பு கே.எஸ்.கே. கணனிப் பயிற்சி நிலையத்தில் அரச அலுவலர்களுக்கான கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர் க.பார்த்தீபன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பதையும்- அருகில் கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களின் பிராந்திய ஆணையாளர் இ.ஐயாத்துரை நிற்பதையும் - கணனிப் பயிற்சி நெறியில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: புதுக்குடியிருப்பு செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாயி சிந்தனை

## பேதங்கள் காண்பவன் அந்தகன்

அநேகத்துவத்தில் ஏகத்துவம் கண்டு அனுபவிக்க இயலாதவன்தான் அந்தகன் எனப்பட வேண்டும். தனதல்லாததை தனதாகவே பாவித்து அனுபவிப்பவன் அந்தகன். தனது உண்மை நிலையை அறியாமல் இந்தத் தேகமேதான் தனது உண்மை ஸ்வரூபமென்று கருதி வாழ்பவன் அந்தகன். எவன் வாழ்க்கையில் விருப்பு வெறுப்பு, உணர்வுகளை வளர்த்துக் கொள்கிறானோ அவனே அந்தகன். மெய்ப்பொருள் ஒன்றே என்பதை உணராமல் எல்லாவற்றிலும் பேதங்களைக் காண்பதே இந்தக் குருட்டுத் தன்மைக்கு மூலகாரணம். கண்ணிருந்தும் அருமையான தெய்வீகத்தைக் காணாவிடில் அதனால் என்ன பயன்? செவிகள் இருந்தும் இனிமையான வீணாகானத்தைக் கேட்டு அனுபவிக்காவிடில் என்ன பயன்? கண் பார்வை சக்தி பெற்றிருந்தும் கூட எல்லாவற்றையும் பேதங்களுடனே பார்க்கிறான். கண்ணினால் காண்பது யாவும் அநித்யமான அழியக்கூடிய பொருள்களே. அழியாதது நிலையானது என்றும் மாறாதது மெய்ப்பொருளான தெய்வம் ஒன்றே. இந்தச் சத்தியத்தை உணர்ந்தால் எந்தவிதமான கலக்கத்திற்கும் இடமில்லை. பார்க்கும் பொருள்யாவும் பரம்பொருளின் வடிவமே எனில் எனது உனது என்று பாகுபடுத்திக்கூற இடமேது. இது தவறான கருத்தேயல்லவா? தனது மற்றவருடையது என்ற வேறுபாட்டுணர்வே எல்லா விதமான துக்கங்களுக்கும் மூலகாரணம்

(த.ச.சா 1988 மார்ச் ப.10)

# கிராம அலுவலர் சம்பள உயர்வை மீளாய்வு செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன்29

கிராம உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் உறுதியளித்தார் என்று வடக்கு-கிழக்கு கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கிராம உத்தியோகத்தர் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றதாகவும்-"அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சின் செயலாளர் இதனைத் தெரிவித்தார் என்றும்-சங்கம் மேலும் தெரிவித்தது.

இவ்விடயம் தொடர்பாக சங்கம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கிராம சேவையாளர்களின் சேவைக்கேற்ப சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை. ஆகவே கிராமசேவையாளர்களுக்கான சம்பள உயர்வை மீளாய்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்விடயம் தொடர்பாக எதிர்வரும் 7ஆம் திகதி அமைச்சின் செயலகத்தில் தேசிய மட்ட கிராம உத்தியோகத்தர் சங்கங்களின் பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்திக்கும்போது அமைச்சின் செயலாளர் இதனை எடுத்துக் கூறவுள்ளார்.

கிராமிய செயலகங்கள் அமைத்தல், கிராம உத்தியோகத்தர்களின் 2007 ஆம் ஆண்டுக்கான தினக் குறிப்பு பதிவேட்டில் திருத்தம் செய்தல் ஆகியன தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதில் வடக்கு-கிழக்கு கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் சார்பில் தலைவர் ப.வசந்தகுமார், செயலாளர் க.வாமதேவன் இணைத் தலைவர் எம்.ஏ.தாஹா ஆகியோர் கலந்து கொண்டனர் வுவு- என்றுள்ளது. (204)

# காணாமற்போன 43 பேர் குறித்த விவரங்களைக் கோருகிறது விசாரணைக் குழு

யாழ்ப்பாணம்,ஜூன்29

குடாநாட்டில் 1996 - 97 காலப் பகுதியில் காணாமற்போன 43 பேர் தொடர்பான விசாரணைக்கு விவரங்களைத் தருமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கோரியுள்ளனர்.

பிரஸ்தாப நபர்கள் காணாமற்போனமை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள, சம்பந்தப்பட்டவர்களின் பெற்றோர், பாதுகாவலர், முறைப்பாட்டுக்காரர் அல்லது சாட்சியாளர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

நேரடியாக விசாரணை செய்ய விசாரணை உத்தியோகத்தர்களைச் சந்திக்க வசதியான திகதியைத் தருமாறு கோரியுள்ளனர்.

கடிதம் மூலமாகவோ அல்லது கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலர் ஊடாக தொடர்புகொள்ளுமாறும் -

*பொறுப்பதிகாரி,காணமற்போனவர்கள் சம்பந்தமான விசாரணைப்பிரிவு, இல 101, வைத்திய வீதி, கொழும்பு 1* என்ற விலாசத்துடனோ அல்லது தொலைபேசி இலக்கம் 011-2321836 என்ற இலக்கத்துடனோ தொடர்புகொள்ளலாம் என்றும் - விசாரணை அதிகாரிகள் கேட்டுள்ளனர். காணாமற்போனோர் விவரம் வருமாறு -

- ஆசிரிநாதன் கிரிஸ்டி ஜயநாதன் - கொழும்புத்துறை (கோவை இல 11),
- ஜி.பாலகிருஷ்ணன், கடற்கரை ஒழுங்கை, குருநகர் (முறைப்பாடு - நாகம்மா) (கோவை இல. 95)
- எச்.எச்.குணாதன், தலங்காவல் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி(கோவை இல. 117)
- பரமணி சந்திரசேகரம், இல.11/2, கொன்வன்ட் வீதி, யாழ். (முறைப்பாடு-சோபிதா) (கோவை இல. 360)
- எஸ்.தவபாலன்,கண்டி வீதி அரியாலை (கோவை இல.475)
- சங்கர் நமசிவாயம் புவனேஸ்வரன் இல. 20 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை (முறைப்பாடு சிவபாக்கியம்) (கோவை இல. 485)
- சதாசிவம் சந்திரசேகரம், கண்டி வீதி, அரியாலை(கோவை இல. 494)
- சற்குணராசா பலனி, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை(முறைப்பாடு சொக்கலிங்கம்) (கோவை இல.500)
- செல்லையா சசீகரன் இல. 72/45 ராஜலிங்கம் வீதி, திருநகர்(முறைப்பாடு - தம்பிப்பிள்ளை(கோவை இல.518)
- சண்முகம் லோகேஸ்வரன், கல்வியங்காடு(கோவை இல. 541)
- உதயகுமார் சண்முகநாதன், இல. 9/7 மலர்மகள் வீதி, அரியாலை(முறைப்பாடு - எம்.சிவப்பிரகாசம்) (கோவை இல. 719)
- வைத்தியலிங்கம் தங்கமுத்து, புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்(முறைப்பாடு வி.கணேசநாதன்) (கோவை இல. 726)
- ஜோன் ஜயரத்தினம் இல.303/18, சின்னட்டி, கரணவாய் மத்தி, கரணவாய்.(கோவை இல.137).
- பரமேஸ்வரி குமுதினி, பாடசாலை ஒழுங்கை சங்கரத்தை, வட்டுக்கோட்டை (முறைப்பாடு - அன்னலட்சுமி) (கோவை இல. 362)
- ரமேஸ்கரன் செல்லத்துரை,குடமியன், வரணி(கோவை இல. 423)
- ரவீந்திரராஜா ராஜரத்தினம், சவக்காடு, சுதுமலை (முறைப்பாடு - ராச லிங்கம்) (கோவை இல.455)
- சிவகுருநாதன் அருட்செல்வம், கப்பூது அல்லது ஆனைக்கோட்டை (கோவை இல. 593)
- சிவரஞ்சன் சிவபாலன்(உடுப்பிட்டி சந்தி அல்லது கொக்குவில். (கோவை இல.601)
- தம்பு மகேந்திரன்(புலோலி மேற்கு. புலோலி)(கோவை இல.652)
- தவராசா முரளிதாஸ் (சுவர்ணமலை, உடுப்பிட்டி)(கோவை இல.679)
- தயாகுணம் தயாபரன், அரியாலை சந்தி அல்லது சுதுமலை வடக்கு(கோவை இல. 685)
- திருச்செல்வம் விஜயச்சந்திரன், பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் (முறைப்பாடு - திருச்செல்வம்) (கோவை இல. 699)
- இரத்தினம் குகேந்திரன், இல.49/A நாகேந்திரபுரம் கைதடி(கோவை இல.447)
- சத்தியவான் ரமேஸ், சாந்தகுகநாதன் மேற்பார்த்து, மிருசுவில்.(முறைப்பாடு - K..சதீஸ்வரன்) (கோவை இல. 491)
- சின்னத்தம்பி சசீ கரன், முல்லைத்தீவு (கோவை இல.570)
- பத்மரூபன ஞானசேகரம், அரியாலை தெற்கு, மீசாலை (கோவை இல. 371)
- தம்பித்துரை துரைராஜா, 02ஆவது ஒழுங்கை, முள்ளிவீதி, அரக்கால் மடம்.(கோவை இல.651)
- தேவச்சந்திரன் தேவன், ஆனைநகர், கிளிநொச்சி (கோவை இல.692)
- திருநாவுக்கரசு சர்வேஸ்வரன் , தனங்கிளப்பு (முறைப்பாடு - திருநாவுக்கரசு) (கோவை இல.704)
- கார்த்திகேசு விஜயன் , செருக்கம் புலம், பண்டத்தரிப்பு (கோவை இல.216)
- மகேஸ்வரன் மாணிக்கம், ராஜகிராமம், கரவெட்டி மேற்கு, கரவெட்டி (கோவை. இல.252)
- நாகமணி அன்னராசா, புலுன்குட்டி, சங்கானை, பண்டத்தரிப்பு (கோவை இல.313)
- பசுபதி தயானந்தன், செம்பியன்பற்று வடக்கு, (முறைப்பாடு - எம்.பசுபதி) (கோவை இல.368)
- பொன்னு அழகரத்தினம், பளை (கோவை இல.382)
- இராசதுரை சுதாகரன், புலுன்குட்டி, சங்கானை, பண்டத்தரிப்பு (கோவை இல.424)
- எஸ்.அம்பிகாவதி, எரக்கம்பத்தை, வல்வெட்டித்துறை (முறைப்பாடு - ஜயந்தி அம்பிகாவதி) (கோவை இல.458)
- எஸ்.பாலகுமார், கட்டப்பிராய் (முறைப்பாடு - பி.பிலோமினா) (கோவை இல.459)
- எஸ்.சபேசன் - அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி (முறைப்பாடு - எஸ்.புஸ்பமலர்) (கோவை இல. - 468),
- தங்கராஜா குணசீலன் - பூவக்கரை வியாபாரி மூலை, வல்வெட்டித்துறை (முறைப்பாடு - ஜி.கல்பனா)(கோவை இல.657),
- தர்மலிங்கம் சுவர்ணசீலன் வதிரி, கரவெட்டி (கோவை இல.671),
- தர்மேஸ்வரன்காசிப்பிள்ளை - சதாபேக்கரி வீதி, உரும்பிராய் - (கோவை இல.674),
- தில்லையம்பலம் யசோதரன் - 'சுகிர்த வாசா', தும்பளை, கரவெட்டி - (முறைப்பாடு - காண்டீபன்),
- ஸ்டான்லி ஜேசுதாசன் - 'வசந்தவாசம்', சுதுமலை கிழக்கு, சுதுமலை - (முறைப்பாடு - சிவாஜினி)(கோவை இல.615).


## 45 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை அழைப்பும்

மலர் மடியில் 08 . 11 . 1971



மண் மடியில் 17 . 05 . 2006

## அமரர் செல்வசிறீ சிறீதாஸ்

*(கனகசபை ஒழுங்கை, காங்கேசன்துறை)*

ஆற்றா தழுத கண்ணீர்
ஆறாகிப் போச்சு!
காற்றாகிக் கனலோடு
நீறாகிப் போச்சு!

போற்றி வந்த தாய் மனது
குருதிப் புனலாச்சு!
தேற்றுவாரின்றி உறவுகளும்
திகைத்திடல் ஆச்சு!

என் அன்புச் செல்வனைத் திடீரெனப் பிரிந்து தவித்து நின்றவேளையில் என் தோளோடுதோள் நின்று உதவி புரிந்த முகமறியாத உள்ளங் களுக்கும், உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் எம் உள்ளம் நிறைந்த நன்றிகள். நாளை [30.06.2006] வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இன்றைய காலம் கருதி இதனையே ... ஏற்றுக்கொள்க என வேண்டுகின்றோம்.

மே/பா.திருமதி ப.சிவலிங்கம்,
சுலைவாசல் சந்தி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(51286) (39-45-15)



## மருத்துவத்துறை பட்டம் உடனடி அனுமதிகள்

Vitebsk
State Medical University

இலங்கை மருத்துவ சபை
உலகசுகாதார ஸ்தாபனம்
ஜி.எம்.சி. அங்கீகாரம் பெற்றது.



பேராசிரியர் வை.அலெக்சீன்கோ M.D., Ph.D.
வெளிநாட்டு மாணவர் அனுமதிப் பிரிவுத் தலைவர் மற்றும் நரம்பியல், நரம்பியல் அறுவைச் சிகிச்சைப் பிரிவுத் தலைவர்

தற்பொழுது இலங்கையில் இருக்கிறார்.

**மருத்துவத்துறை கலாநிதி எம்.டி.**

ஆங்கில மொழி மூலம்
பெறுபேறு எதிர்பார்ப்போரும் விண்ணப்பிக்கலாம்.
உடன் அனுமதி வலை அமைப்பு

கொழும்பு PATHE கல்வி நிறுவனம்- 25 ஜூன் மு.ப. 9
கண்டி - ஹோட்டல் சுவிஸ்ஸி - ஜூன் 29 மு.ப. 9.30
மட்டக்களப்பு - சுபாராஜ் உணவகம் - ஜூன் 30 மு.ப 9.30

கருத்தரங்கையடுத்து உடன் அனுமதி தொடரும்.
உடன் அனுமதி தொடர்பான நேர்காணல்களுக்கும் மேலதிக தகவல்களுக்கும் தொடர்புகொள்க. 0773017883

PATHE ACADEMY
Overseas Student Placement Department
37, School Lane, Colombo 03. 2502012, 5377752 , 2591271


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கம்-புலி வாய்களுக்குள் சிக்கித் தவிக்கும் நோர்வே

**போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்தான வேளை முதல் இலங்கை அரசியல் சதுரங்கப் போட்டியில் சம்பந்தப்படும் தரப்புக்களின் காய் நகர்த்தல்கள், அதற்கான எதிர்பார்ப்புக்கள், அதன் பிரதிபலன்கள், என்பவையெல்லாம் சுவாரஸ்யம் மிக்கவை. அவை அரசியல் திருப்பங்களையும் ஏற்படுத்துவனவாய் அமைவது கண்கூடு. இவை குறித்து தனியான கோணமொன்றில் சிந்திக்கும் கட்டுரையாளர் உப்புல் யோசப் பெர்னாண்டோவின் இக்கட்டுரை 18.06.2006 இல் லங்கா தீப ஞாயிறு இதழில் வெளிவந்தது. அதன் தமிழ் வடிவத்தை இங்கு தருகிறோம்.**

பிரபாகரன் தனது இன்றைய நடை முறைகள் ஊடாக எந்த இலக்கை அடைய முனைகிறார்? இந்த வினாவே இன்று நாட்டில் தலைதூக்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினர் அரச ஹெலியில் கட்டுநாயக்கவுக்கு வந்து, அரசின் அனுசரணையோடு ஒஸ்லோ செல்லும் வழியில் இடைநடுவில் ஜெனீவாவிலும் தரித்து,நின்று பின்னர் ஒஸ்லோவில் வைத்து அரச தரப்போடு பேச்சுகளை மேற்கொள்ள மறுத்து, அரசையும் தாக்கி விமர்சித்து, மீளவும் அரசுக்குச் சொந்தமான ஹெலியில் கட்டுநாயக்கவிலிருந்து கிளிநொச்சி சென்றடைந்துள்ளனர்.

இது என்ன புதுக்குழப்பம்? என்னதான் நடந்துள்ளது? இவ்வாறு அரசு மாத்திரமல்ல நாடும் தலையைப் பிய்த்துக்கொள்கிறது.

இதில் சிந்திப்பதற்கு எதுவும் இல்லை. இந்திய அரசிடமிருந்து நிதி உதவியையும் பெற்றுக்கொண்டு, இந்திய இராணுவம் பாதுகாப்பு வழங்க இந்திய அரசின் விமானத்தில் இலங்கைக்கு வந்து, பின்னர் இந்திய அரசின் இராணுவத்தையும் தாக்கி இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும் ஏற்கமறுத்த பிரபாகரன்தான் இன்னமும் இந்நாட்டில் இருக்கிறார்.

## கொக்கின் தலையில் வெண்ணெய்

அன்று தன்னால் இயன்ற பங்களிப்பையும் இந்தளவுக்கு உதவி ஒத்தாசைகளையும் வழங்கி பிரபாகரனை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்த இந்தியாவின் அபிலாஷை, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பிரபாகரன்



மூலமாகவே நடைமுறைப்படுத்தச் செய்து இலங்கையில் சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டுமென்பதாகவே இருந்தது. ஆனால், இந்தியாவுக்கு எதிராக எழுந்து இந்திய இராணுவத்தைப் பிரபாகரன் தாக்கும் வரையில் இந்தியாவுக்கு அது தெரிந்திருக்கவில்லை. இதைத்தான் குழந்தைக்குப் போக்குக் காட்டுவது அல்லது மடைப்பட்டம் கட்டுவது என்று கூறப்படுகிறது. இதை கொக்கின் தலையில் வெண்ணெய் வைப்பது என்று கூடக் கூறுகிறார்கள். இதற்கு என்னதான் வியாக்கியானம் வழங்கினாலும் எவ்வாறோ இந்த ஒஸ்லோ பயணத்திலும் அதுபோன்றதொரு செயற்பாடே இடம்பெற்றுள்ளது.


சமாதானம் தான் தமது குறிக்கோள் என்று கூறிக்கொண்டு ஏமாற்றி, சர்வதேச சமூகத்துக்குப் போக்குக் காட்டும் நடைமுறையையே அரசு கையாண்டு வருகிறது என்றும் வெளிநாட்டவர்களுக்கு மடைப்பட்டம் கட்டியே அவர்களைக் கிளிநொச்சிக்கு அரசு அனுப்பி வைக்கிறது என்றும் பிரபாகரன் எண்ணுகிறார். அதற்குப் பதிலடியாக சர்வதேச சமூகத்தைக் கொண்டே அரசுக்கு மடைப்பட்டம் கட்டுவதற்குப் பிரபாகரன் திட்டம் தீட்டினார்.

அதற்கமைய போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக அரசுத் தரப்புடன் பேச்சுகளை மேற்கொள்ளச் சம்மதிப்பதாகவும் சர்வதேச சமூகத்துக்கு அறிவிப்பு விடுத்தார். அத்தோடு அரச விமானங்களில்தான் ஒஸ்லோவுக்குச் செல்வோம் என்றும் அறிவித்தார். தமது அக்கோரிக்கைக்கு அரசு பல நிபந்தனைகளை முன்வைக்கக்கூடும் என்பதே பிரபாகரனின் எதிர்பார்ப்பாகவும் இருந்தது. ஆனால், அரசின் புத்தி அந்தளவுக்கு மழுங்கிப் போகவில்லை. ஆரம்பத்தில் அரச விமானப் பயண வசதியை வழங்குவது சாத்தியப்படாது என்றே அரசு அடித்துக்கூறியது. அதுபோன்றே ஆரம்பத்தில் பேச்சுக்களை ஒஸ்லோவில் நடத்த முடியாது என மறுத்துரைத்த அரசு பின்னர் ஒரேயடியாக அவற்றுக்கெல்லாம் சம்மதித்தது.

## அரசு வைத்த பொறி

அரசின் இந்தப் போக்கு - திடீர் மாற்றம் தமக்குப் போக்குக் காட்டி ஏமாற்றமுயலும் மேலுமொரு பொறி என்றே பிரபாகரன் எண்ணினார். சர்வதேச சமூகத்தைக் குளிப்பாட்டி தூக்கிவைத்து தமக்குப் போக்குக் காட்டி மடைப்பட்டம் கட்ட எத்தனிக்கும் அரசுக்கு சர்வதேச சமூகத்தைப் பயன்படுத்தி மடைப்பட்டம் கட்டத் திட்டம் தீட்டினார் பிரபாகரன். அதன்படியே வாய்நிறைந்த சிரிப்பை உதிர்த்து கையசைத்து விடைகூறி அரசின் விமானத்தில் ஒஸ்லோவுக்குச் சென்று பேச்சு சாத்தியப்படாது என விடுதலைப் புலிகளது குழுவினர் தெரிவித்தனர்.

இன்று நோர்வேத் தரப்பும் சர்வதேச சமூகமும் பாக்குவெட்டியில் மாட்டிக்கொண்டுள்ள பாக்கைப் போன்று சிக்கித் தவிக்கின்றன. அரசோ நோர்வேத் தரப்பு மீது குறை கூறி குற்றம் சுமத்துகின்றது. நோர்வேத் தரப்போ ஒஸ்லோ பேச்சுகளை முறித்துக்கொண்டமைக்கான பொறுப்பை விடுதலைப் புலிகளே ஏற்க வேண்டுமெனக் கூறி அவர்கள் மீது குற்றம் சுமத்தி அறிக்கைகளை விடுத்துவருகிறது.



அதை எதிர்த்த புலிகளின் கர்ஜனைக்குப் பயந்த நோர்வேத் தரப்பு, ஜெனீவா இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தவறியமைக்கு அரசே பொறுப்பு என்று அரசு மீதும் குற்றம் சுமத்தி, போர்நிறுத்த கண்காணிப்புக் குழு ஊடாக அறிக்கைகளை விடுத்து வருகிறது. அதைக் கண்டித்து அரசு, நோர்வேத் தரப்பைச் சாடுகிறது - முறைத்துப் பார்க்கிறது. இவை காரணமாக இன்று நோர்வேத் தரப்பு விரக்தியுற்றுள்ளது. ஆனால், முயற்சியைக் கைவிடுவதாகவும் இல்லை.

## நோர்வேயின் நோக்கம்

தற்போது, நோர்வேத் தரப்பு, தென்னாசியாவில் கால்பதித்து அங்கேயே தங்கிவிட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டியுள்ளது. அதாவது, நோர்வேத் தரப்பு இலங்கையை நாடியது இலங்கையில் கால் பதித்து தமது செல்வாக்கை நிலை நிறுத்திக் கொள்வதற்கு அல்ல. இந்தியாவே அவர்களின் இலக்காகும். இதற்கு முந்திய காலகட்டத்தில், நோர்வே என்றால் இந்தியாவுக்கு வேப்பங்காயாகக் கசந்தது. ஆனால், இலங்கையில் கால் பதிப்பதற்கு முன்னர் இந்தியாவை நாடி ஓடி வருவதும் இலங்கையின் விவகாரத்தில் பங்களிப்பை வழங்கியதன் பின்னரும் இந்தியாவை நாடிவருவதுமான நோர்வேயின் அணுகு முறையும் இந்தியாவின் மனதை மகிழச் செய்துள்ளது. ஆசிய வட்டகை நாடுகளில் உருவாகும் பிரச்சினைகளில் தலையிட்டு மத்தியஸ்தப் பணியை மேற்கொள்வதற்குப் பொருத்தமான - தம்மால் ஆட்டுவிக்கப் பொருத்தமான-கைப்பொம்மை நோர்வேதான் என இந்தியா இப்போது எண்ணியிருக்கக்கூடும்.

உண்மையில் உலகில் சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே [illegible] கொள்வது அ[illegible] விதிக்கும் அமெரிக்கா அவற்றைப் பூசி மெழுகிச் சரிப்படுத்துவதற்கு நோர்வேத் தரப்பை அங்கு அனுப்பி வைக்கிறது. ஆயினும், தென்னாசிய வட்டகை நாடுகளில் இந்தியாவை மீறி அமெரிக்கா தலையிட எத்தனிப்பதில்லை. மேலும், இலங்கையில் உருவாகியுள்ள பிரச்சினையானது இந்தியாவுக்கும் பெரும் தலையிடியே.

## இந்தியாவின் கணக்கு

இலங்கை அரசு சமாதான முயற்சிகளுக்காக நோர்வேக்கு அழைப்பு விடுத்தபோது, இந்தியா திகைத்துப் போனது. இதில் பீதியுறுவதற்கு எதுவும் இல்லையென்று அமெரிக்கா இந்தியாவைச் சமாதானப்படுத்தியது. இந்தியாவும் இந்த விவகாரத்தை சில காலமாகத் தொடர்ந்து அவதானித்து வந்தது. நோர்வே தரப்பு, இந்தியாவைக் கலந்தாலோசிக்காமல் இலங்கையில் பணியெதனையும் ஆரம்பிப்பதும் இல்லை. திரும்பிச் செல்லும் போது தம்மைச் சந்திக்காமல் போவதும் இல்லை என் பதையும் புரிந்து கொண்டது. தற்போது, அமெரிக்கா உலக விவகாரங்களைத் தீர்த்து வைக்கும் செயற்பாடுகளுக்கு நோர்வேயைப் பயன்படுத்திக் கொள்வதைப் போன்று, இந்தியா தென்னாசிய வட்டகையில் உருவாகும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க நோர்வே யைப் பயன்படுத்திக்கொள்கிறது. அந்த அணுகு முறைக்கேற்பவே நேபாளத்தில் உருவான பிரச்சினையைத் தீர்த்து வைக்க இந்தியா நோர்வேத் தரப்பைப் பயன்படுத்திக் கொண்டது.

ஆயினும், தற்போது நோர்வேத் தரப்பு புலியின் வாய்க்கும் சிங்கத்தின் வாய்க்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு விழி பிதுங்கி நிற்கின்றது. ஜப்பானும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் நோர்வேயின் காலில் தொங்கி இங்கு வந்து, இந்தச் சிங்கம் - புலி மோதலில் இடையில் அகப்பட்டுக் கொண்டு அங்கும் இங்குமாக நசிபடுகின்றன. ஆனால், இந்தியாவோ இலங்கை விடயத்தில் நேரடியாகத் தலையிடாது தன்னைப் பாதுகாத்துக்கொண்டு பார்வையாளனாக ஒதுங்கியிருந்து அவதானித்து வருகிறது.


## மஹிந்தவின் வெற்றி

பிரபாகரன் ரணில் விக்கிரமசிங்கவைத் தோல்வியுறச் செய்து, மஹிந்த ராஜபக்ஷவை ஏன் வெற்றிபெறச் செய்தாரென்பதை இந்தியா அறியாமல் இல்லை. மஹிந்தவின் வெற்றிக்குப் பின்னர் அடுத்து வந்த நவம்பர் 27 மாவீரர்தின உரையின்போது பிரபாகரன் தமிழ் மக்கள் முன் ஆற்றிய உரையை இந்தியா கேட்டுக் கொண்டுதான் இருந்தது. அந்த உரையில் ஓராண்டு காலத்துள் தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படாது விடில் தனியரசு நிறுவுவதைத் தவிர வேறு மாற்று வழி இல்லையென்று பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார். பிரபாகரன் குறிப்பிட்ட அந்த ஆண்டு முடிவடைய இன்னமும் ஆறு மாதங்கள்தான் எஞ்சியுள்ளன. இந்த ஆறுமாத காலத்துள் நடக்கப்போவது என்ன? ஆறு மாதங்களும் முடிவுற்று அடுத்துவரும் மாவீரர் தின உரையில் பிரபாகரன் ஆற்றவிருக்கும் உரையில் கூறுவது எதுவாக இருக்கும்? அன்றைய தினத்தில் தமிழீழம் பிரகடனப் படுத்தப்படுமா என்ற பீதியும் நாட்டில் எழுந்துள்ளது.

## அதிகாரப் பரவலாக்கல்

இதை ஊகித்துக்கொண்டுதான் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தை வியூகப்படுத்தி நடைமுறைப்படுத்துமாறு இந்திய அரசு இலங்கையை வலியுறுத்தி வருகிறது இலங்கை அரசு அதற்குக் காது கொடுக்காது - அலட்சியப் போக்கைக் கைக்கொண்டுவருமாயின், பிரபாகரன் தமிழீழ அரசை பிரகடனப்படுத்துவாரென்பது இந்தியாவுக்கும் தெரிந்த விடயமே. இதுதான் இன்றைய நிலைப்பாடு; இதற்கு என்னதான் பரிகாரம் தேடமுடியும்?

இலங்கை பிளவுபடுமாயின் அது பிரபாகரனால்தான் மேற்கொள்ளப்படும். அவ்வாறு இலங்கை இரண்டாகப் பிளவுபட்டதன் பின்னர் ஏதோ ஒரு விதத்தில் பிரபாகரனைத் தீர்த்துக்கட்டி விட்டு தமிழீழப் பகுதியை இந்தியாவோடு இணைத்துக்கொள்ளுங்கள் என தமிழ்நாடு மாநில அரசு இந்திய மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்தால் நிலைமை என்னவாகும்? பின்னர் அப்பிரதேசம் தமிழ்நாட்டுக்குத்தான் வேண்டு



மென்று தமிழ்நாடு அடம்பிடித்தால் அதன் பலாபலன் என்னவாகும்?

**தமிழில்: சரா**

இத்தகைய யோசனைக்கு இந்திய மத்திய அரசு இடமளிக்கும் எனக் கருதமுடியாது. ஆயினும், வட்டகை அரசியல் வியூகம் தொடர்பான தேவையை மாற்றியமைக்க ஒருநாட்டின் அரசியல் நிர்வாகத்துக்கு ஆற்றல் உள்ளது. எந்தவொரு நாடும் தனது உள்நாட்டு அரசியலின் நெளிவு சுளிவுகளை ஆராய்ந்து தெளிந்துகொண்ட பின்னரே இறுதியில் வெளியுலக அரசியல் தொடர்புகளைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு கையாள்வது பற்றித் தீர்மானிக்கும். எனவே, முதலில் இலங்கை அரசு, பிரபாகரனின் திட்டம் குறித்த நெளிவுசுளிவுகளையும் அவரது காய்நகர்த்தல்களையும் அலசிஆராய்ந்து தெளிய வேண்டியுள்ளது. அரசு அதனை உரியவகையில் செய்துமுடிக்குமாயின், பிரபாகரனுக்குப் போக்குக் காட்ட - பிரபாகரனை உரிய வகையில் கையாள - அரசுக்கு வாய்ப்புக் கிட்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. ✱

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6242
021 2223984
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying
யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ சக்திமயம்

முத்துமாரியம்பாள் துணை



## புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய
## நவகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா
# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

கிரியாரம்பம்: விய வருஷம் ஆனி மாதம் 15 ஆம் திகதி இன்று (29.06.2006) வியாழக்கிழமை பின்னிரவு 5 மணி வெள்ளி அதிகாலை

யாகாரம்பம்: ஆனி மாதம் 18 ஆம் திகதி (02.07.2006) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி

எண்ணெய்க்காப்பு: ஆனி மாதம் 20 ஆம் திகதி, 21 ஆம் திகதி (04.07.2006) செவ்வாய்க்கிழமை, (05.07.2006) புதன்கிழமை

மஹா கும்பாபிஷேகம்: **ஆனி மாதம் 22 ஆம் திகதி (06.07.2006) வியாழக்கிழமை காலை 9.02 மணிமுதல் 10.50 மணிவரையுள்ள சிங்கலக்கினம் -சுபமுகூர்த்த வேளை**

பிரதிஷ்டா பிரதம குரு:

'சிவாகம கிரியா சிரோன்மணி' 'பிரதிஷ்டா வித்தகர்' ' கிரியாபூஷணம்'

**சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள்-**

**பிரதமகுரு, சிவன் தேவஸ்தானம் - புங்குடுதீவு.**

ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயம், 3 ஆம் வட்டாரம், புங்குடுதீவு. **-ஆலய பரிபாலனசபை.**

# புதுப்புது அம்சங்களுடன்
# புதுப் பொலிவுடன்




## நேரடிப் பேச்சுக்கு இன்னும் வாய்ப்பு உண்டா?



## தொடரும் தற்கொலை தாக்குதல்கள்

ஐ.தே.க. மீண்டும் உயிர்பெறுவதற்கு திருச்செல்வமே காரணமாக இருந்தார்!

# தற்போது பரபரப்பான விற்பனையில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் காஸா பகுதியில் பாரிய படை நகர்த்தல்

## கடத்தப்பட்ட சிப்பாயை மீட்க இஸ்ரேல் முயற்சி

டெல்அவில்,ஜூன்29

பலஸ்தீன தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட இஸ்ரேலியப் படைச்சிப்பாய் ஒருவரை மீட்பதற்காக தென் காஸா பகுதியில் தரை வழியான படை நகர்த்தல் ஒன்றை இஸ்ரேலிய இராணுவம் தொடங்கியிருக்கிறது.

காஸா பகுதியில் பாலங்கள் பலவற்றின் மீதும் மின்சார நிலையங்கள் மீதும் விமானக் குண்டு வீச்சுக்களை நடத்தியதன் பின்னர் இஸ்ரேலியர் பாரிய தரைவழி நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

கடந்த ஞாயிறன்று காஸாவில் இஸ்ரேலிய நிலையொன்றின் மீது தாக்குதல் நடத்தி கிலாட் ஷா லிட் என்ற இஸ்ரேலிய சிப்பாயை பலஸ்தீன தீவிரவாதிகள் கடத்தியிருக்கின்றனர்.

கடத்தப்பட்டவர் விடுவிக்கப்படாவிட்டால் பெரும் எடுப்பில் இராணுவத் தாக்குதல் முன்னெடுக்கப்படும் என்று இஸ்ரேலியர்கள் அறிவித்திருக்கின்றனர். இதையடுத்து காஸா எல்லைப் பகுதியில் இஸ்ரேலிய டாங்கிகள் நிலைகொள்ளத் தொடங்கியிருக்கின்றன.

காஸாவில் பயன்படுத்தப்படாதிருக்கும் சர்வதேச விமான நிலையப் பகுதியைக் கடந்து சென்றுள்ள இஸ்ரேலியப் படைகள், ராபா நகர்ப் பகுதியில் நிலைகொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். நகரின் உள்ளே செல்லாமல் நகருக்கு வெளியில் பண்ணை நிலங்களில் அவர்கள் நிலை எடுத்திருப்பதாக பி.பி.ஸி நிருபர் தெரிவித்துள்ளார்.

டாங்கிகளின் மூலம் அனல் குண்டுகளைப் பொழிந்து கொண்டு தற்பாதுகாப்பைப் பயன்படுத்தி படைகள் ராபா நகர்ப் பகுதிக்குள் நுழைவதாக நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

1967 ஆம் ஆண்டு இஸ்ரேல் ஆக்கிரமிப்பின் பின்னர் காஸாவிலிருந்து ஆயிரக்கணக்கான குடியேற்றவாசிகளையும் படைகளையும் இஸ்ரேலியர் அப்புறப்படுத்தியிருந்தனர்.

இது நடந்து ஒரு வருடம் கூட முடிவுறாத நிலையில் இந்தப் பாரிய படையெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் காஸாவிலிருந்து இஸ்ரேலியப்படைகள் முழுமையாக வெளியேறிவிட்ட நிலையிலும் பலஸ்தீன தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்துவதைத் தடுக்கும் நோக்கில் அவர்களின் இலக்குகள் மீது இஸ்ரேலியப்படைகள் அவ்வப் போது தாக்குதல்களை நடத்தி வந்திருகிறார்கள்.

(ப)

## கல்பனா சாவ்லா பிறந்ததினம் மகள்கள் தினமாக பிரகடனம்



மறைந்த விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லாவை நினைவு கூரும் வகையில், அவரது பிறந்த நாளை மகள்கள் தினமாகக் கொண்டாட இந்திய மக்கள் தொடர்புப் பேரவை முடிவு செய்துள்ளது.

நாசாவைச் சேர்ந்த விண்வெளிவீராங்கனை கல்பனா சாவ்லா. இந்தியரான இவர், விண்வெளி மையத்திலிருந்து கொலம்பிய விண்கலத்தில் பூமிக்கு திரும்பிய போது எதிர்பாராத விதமாக விண்கலம் வெடித்துச் சிதறியது. இதில் கல்பனாவும் அவருடன் சென்ற விண்வெளி வீரர்களும் பலியாகினர்.

இவரது பிறந்த நாளை மகள்கள் தினமாக கொண்டாடுவதுடன் எதிர்வரும் முதலாம் திகதி 'மகள்கள் நமக்கு பெருமை தேடித்தருகின்றனர்' எனும் தலைப்பில் கலந்தாய்வுக் கூட்டமும் நடைபெறவுள்ளது. (202)

## நோய் தீர்வதற்கு மலைப்பாம்பை வணங்குகிறார்கள்



கம்போடியாவில் கிராமவாசிகள் தண்ணீர் சேகரிக்கச் செல்லும்போது முதலில் வெள்ளை மலைப்பாம்பின் முன் வணங்கி ஆசிவேண்டி பிரார்த்திக்கிறார்கள்.

வாதம் போன்ற உடல் நோய்கள் தீர்வதற்கு இவ்வாறு பாம்பை வணங்குவது பலன்தருவதாக அவர்கள் நம்புகிறார்கள்.

நொம்பெண் நகருக்கு 350 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பாட்டம்பாங் நகரிலுள்ள மக்கள் இதில்அதிகம் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். பசு, பாம்புகள் மற்றும் ஆமைகள் போன்ற பிராணிகளை வணங்குவதன் காரணமாக நோய்கள் தீர்ந்துவிடும் என்று கம்போடியாவில் பெரும் எண்ணிக்கையான மக்கள் நம்புகின்றார்கள். (ப)

## இந்திய அபிவிருத்தித் திட்டங்களுக்கு ரஷ்யா ஒத்துழைப்பு வழங்கத் தயார்

### ரஷ்ய அதிபர் புடின் தெரிவிப்பு

மாஸ்கோ,ஜூன்29

அணுசக்தி உட்பட அனைத்து வகையிலும் இந்தியாவுடனான ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டும் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் பணியாற்றும் ரஷ்யத் தூதர்களுக்கான மாநாடு மொஸ்கோவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ரஷ்ய அதிபர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

சர்வதேச அளவிலான கொள்கைகளை வகுப்பதில் முக்கிய இடம்பிடிக்கும் நிலைக்கு ரஷ்யா மீண்டும் வரவேண்டும். இந்தியா மற்றும் சீனாவுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும். சோவியத் யூனியன் காலம் முதல் இந்தியா நம்மிடம் இருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்து வருகிறது. அணுசக்தி உட்பட அனைத்து துறைகளிலும் இந்தியாவுடனான ஒத்துழைப்பை ரஷ்யா அதிகரிக்க வேண்டியது அவசியம். உலகிலேயே எண்ணெய் அதிகம் வாங்கும் நாடுகளில் சீனா இரண்டாம் இடத்தை வகிக்கிறது. சீனாவின் தேவையை நிறைவு செய்யும் வகையில் அந் நாட்டுடனான உறவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் ரஷ்யா-சீன நாடுகள் வளர்ச்சியடையும் -இவ்வாறு புடின் கூறினார். (202)

## ஆயுதங்களை ஒப்படைப்பதில்லையென மாவோயிஸ்டுக்கள் திட்டவட்ட முடிவு

காத்மண்டு,ஜூன்29

'ஐ.நா. சபை கண்காணிப்பின் கீழ் ஆயுதங்களை எங்கள் வசமே வைத்துக் கொள்ள விரும்புகிறோம். இப்போதைக்கு ஆயுதங்களை ஒப்படைக்க தயாராக இல்லை என்று நேபாள மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.நேபாளத்தில் இடைக்கால அரசு அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் செய்தி நிறுவனமொன்றிற்கு பேட்டியளித்த நேபாள உள்துறை அமைச்சர், இடைக்கால அரசில் மாவோயிஸ்ட்டுகள் பங்கேற்க வேண்டும் எனில், ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என நிபந்தனை விதித்தார்.

இந்நிலையில், மாவோயிஸ்ட் தீவிரவாத அமைப்பின் தலைவர் பிரசந்தாவும், மற்றொரு முக்கிய தலைவரான பாபுராம் பட்டாரும், ஏழு கட்சி கூட்டணியின் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது, ஐ.நா., சபையின் கண்காணிப்பின் கீழ் ஆயுதங்களை தங்கள்வசம் வைத்துக் கொள்ள விரும்புவதா கவும், தற்போதைய நிலையில் ஆயுதங் களை ஒப்படைக்க தயாராக இல்லை என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தனர். அதற்கு சம் மதம் தெரிவித்த ஏழு கட்சி கூட்டணியினர், 'மாவோயிஸ்டுகள் மக்களிடமிருந்து வலுக்கட்டாயமாக பறித்த சொத்துக்கள் அனைத்தையும் அரசிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என புதிய நிபந்தனை விதித்தனர்.

(202)




## 18 ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி

## கோல் தள்ளுகிறார் றொனால்டோ; போட்டுத் தாக்குகிறது பிறேசில்

றொனால்டோவின் சாதனையுடன் நடப்பு சம்பியன் பிறேசில் அணி காலிறுதிக்குள் நுழைந்தது. இரண்டாம் சுற்றில் பிறேசில் அணி கானாவை 3-0 என்ற கோல் கணக்கில் சுலபமாக வீழ்த்தியது. ஆக்ரோஷமாக ஆடிய திருப்தியுடன் ஆபிரிக்காவின் கானா உலகக் கிண்ணத் தொடரில் இருந்து விடைபெற்றது.

நேற்றுமுன்தினம்டார்ட்மன்ட்டில்நடந்த 'நொக்-அவுட்' முறையிலான இரண்டாம் சுற்று ஆட்டத்தில் ஐந்து முறை சம்பியனான பிறேசில் அணி, அறிமுக கானாவைச் சந்தித்தது. பிறேசில் மோதும் ஆட்டம் என்பதால் உலக ரசிகர்கள் நொடிக்கு நொடி பரபரப்பை எதிர்பார்த்தனர்.

இதற்கேற்ப விசில் ஊதிய முதல் நிமிடத்திலேயே பிறேசிலின் நட்சத்திர வீரரான றொனால்டோ பந்துடன் கானா பகுதிக்குள் புகுந்தார். ஆனால், அது முறையற்றது என அறிவிக்க, ஒரு வழியாக கானா தப்பியது. 5ஆவது நிமிடத்தில் ஹாக்கா, றொனால்டோ கூட்டணி கலக்கியது. ஹாக்கா கொடுத்த பந்துப் பரிமாற்றம் மூலம் றொனால்டோ அபாரமாகக் கோல் அடிக்க, பிறேசில் 1-0 என்று முன்னிலை பெற்றது. 29ஆவது நிமிடத்தில் றொனால்டினோவுக்கு அருமையான வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், கானா கோல்காப்பாளர் ரிச்சர்ட் கிங்சன் துடிப்பாகத் தடுக்க வாய்ப்பு நழுவியது. 37ஆவது நிமிடத்தில் கிடைத்த தடையற்ற உதை வாய்ப்பையும் றொனால்டினோ வீணாக்கினார்.

'ஆபிரிக்கக் கண்டத்தின் பிறேஸில்' எனஅழைக்கப்படும்கானாஅணி தனது அசுர வேக ஆட்டத்தால் பிறேஸிலையே அசர வைத்தது. 42ஆவது நிமிடத்தில் இந்த அணியின் ஜான் மென்சா, தலையால் முட்டிய பந்தை பிறேசில் கோல்காப்பாளர் திடா சாமர்த்தியமாகத் தடுத்தார். இதேபோல் மாத்யூ அமாவோ, எரிக் அடோ போன்றவர்கள் பிறேசிலின் தற்காப்பு பகுதியை மிக எளிதாகத் தகர்த்தனர். ஆனாலும், ஆட்டத்தை முடிக்கும் திறன் இல் லாததால் கோல் வாய்ப்புகளைக் கோட்டைவிட்டனர்.

முதல் பாதியின் 'ஸ்டாபேஜ்' நேரத்தில் பிறேசில் அணித்தலைவர் கபு பந்தைப் பரிமாற்றம் செய்ய, அதைப் பெற்ற ஆட்ரியானோ (46ஆவது நிமிடம்) அப்படியே அடித்து கோல் ஆக்கினார். ஆனால், தொலைக்காட்சி மறு ஒளிப்பதிவில் அது முறையற்ற கோல் என்பது தெளிவாகத் தெரிந்தது. கானா வீரர்கள் நடுவருடன் நீண்ட நேரம் வாதாடியும் பலன் கிடைக்கவில்லை. முதல் பாதி முடிவில் பிரேசில் 2-0 என்ற வலுவான முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியிலும் பிறேசிலின் ஆதிக்கம்தான். 56ஆவது நிமிடத்தில் றொனால்டினோ கொடுத்த பந்தைப் பெற்ற றொபேர்ட்டோ கார்லஸ், வாய்ப்பை நழுவவிட்டார். 60ஆவது நிமிடத்தில் ஆட்ரியானோவுக்கு பதிலாக மாற்று வீரராக ஜூனின்ஹோ களமிறக்கப்பட்டார். முரட்டு ஆட்டம் ஆடிய கானாவுக்கு 80ஆவது நிமிடத்தில் பேரிடி விழுந்தது. அந்த அணியின் அசமோவா கியான் இரண்டாவது மஞ்சள் அட்டை பெற, சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதையடுத்து 10 பேருடன் விளையாட வேண்டிய பரிதாப நிலைமைக்கு கானா தள்ளப்பட்டது.

ஆட்டத்தின் 84ஆவது நிமிடத்தில் பிறேஸிலின் ஜோஸ்சி கானா தற்காப்பு வீரர்களை எல்லாம் கடந்து கோல்காப்பாளர் ரிச்சர்ட் கிங்சனை தாண்டிச் சென்று தனி ஆளாக அற்புத கோல் அடித்தார். இறுதியில் பிறேஸில் அணி 3-0 என்ற கோல் கணக்கில் கானாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

இந்த வெற்றியை பிறேஸில் ரசிகர்கள் வழக்கம்போல் பாரம்பரிய சம்பா நடனம் ஆடி உற்சாகமாக கொண்டாடினர். இந்த வெற்றியுடன் உலகக் கிண்ண ஆட்டங்களில் தொடர்ந்து தனது 11ஆவது வெற்றியை பிறேஸில் பதிவுசெய்தது. இந்த அணி கடந்த 1998இல் நடந்த இறுதியாட்டத்தில் பிரான்ஸிடம் தோற்றது. அதற்கு பிறகு, பிறேஸிலின் வெற்றி நடை தொய்வின்றித் தொடர்கிறது.

## ஜிடேன் மாயாஜாலம் மிரண்டது ஸ்பெயின்

ஹனோவர்,ஜூன் 29



அணித் தலைவர் ஜிடேன் மாயாஜாலம் காட்ட, பிரான்ஸ் அணி ஸ்பெயினை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. மிகவும் எதிர்பார்க்கப்படும் காலிறுதியில் பிரான்ஸ் அணி பிரேசிலுடன் மோதவுள்ளது.

நேற்றுமுன்தினம் ஹனோவரில் நடந்த 'நொக்- அவுட்' முறையிலான இரண்டாம் சுற்று ஆட்டத்தில் முன் னாள் சம்பியன் பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் அணிகள் மோதின. ஒரு ஆட்டத்தடைக்கு பின்னர் பிரான்ஸ் அணியில் மீண்டும் ஜிடேன் இடம்பெற்றிருந்தார். ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் நட்சத்திர வீரரான ஹென்ரி அருமையாகப் பந்தை உதைத்தார். ஆனால், ஸ்பெயின் கோல்காப்பாளர் இகர் கேசிலாஸ் துடிப்பாகத் தடுத்துவிட, வாய்ப்பு நழுவியது.

ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் லிலியன் துர்ராம், ஸ்பெயினின் பாப்லோ இபர்னசை பெனால்டிப் பகுதிக்குள் வைத்து முரட்டுத்தனமாகத் தள்ளி விட்டார். இதைப் பார்த்த நடுவர் ரொபர்ட்டோ ரோசட்டி, உடனடியாக ஸ்பெயின் அணிக்கு 'பெனால்டி' வாய்ப்புத் தந்தார். இப்போது பந்தை அடிக்க வருகிறார் ஸ்பெயினின் டேவிட் வில்லா. எதிரே பிரான்ஸின் அனுபவ கோல்காப்பாளர் பார்த்தாஸ். அதிவேகமாக வந்த பந்து, பார்த்தாஸை கடந்து கோல் வலைக்குள் புகுந்து விட, ஸ்பெயின் 1-0 என்ற முன்னிலை பெற்றது. இத்தொடரில் வில்லா அடிக்கும் மூன்றாவது கோலாக இது அமைந்தது.

இதற்கு 41ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் அணி பதிலடி கொடுத்தது. இம்முறை பிராங்க் ரிபரி பந்தோடு மின்னல் வேகத்தில் ஓடி வந்து, ஸ்பெயின் கோல்காப்பாளர் இகர் கேசிலாசை கடந்து கோல் அடித்தார். இதையடுத்து முதல் பாதி முடிவில் ஆட்டம் 1-1 என்ற கணக்கில் சம நிலையை எட்டியது.

இரண்டாவது பாதியில் கோல் அடிக்க பிரான்ஸ் அவசரம் காட்டியது. 83ஆவது நிமிடத்தில் இந்த அணியின் தலைவர் ஜிடேன் தடையற்றஉதை வாய்ப்பின் மூலம் அடித்த பந்தை, பாட்ரிக் வியர்ரா அப்படியே தலையால் முட்டி கோல் ஆக மாற்ற, பிரான்ஸ் 2-1 என்ற முன்னிலை பெற்றது. 'ஸ்டாபேஜ்' நேரத்தில் மீண்டும் மிரட்டினார் ஜிடேன். தனி ஆளாக பந்தை கொண்டு சென்ற இவர் அசுர வேகத்தில் கோல் அடிக்க (92ஆவது நிமிடம்), பிரான்ஸ் அணி ஸ்பெயினை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. போராடிய ஸ்பெயின் தொடரில் இருந்து வெளியேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னுறுதித் தீர்வை

*யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்*

குணபாலசிங்கம் பெண் இராஜேஸ்வரி
(முன்பு)
இன்பருட்டி, பருத்தித்துறை,
தற்போது மே/பா பி.கிருஷ்ணமூர்த்தி
114/19, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
- மனுதார்

வழக்கு இல.மணநீக்கம்/681 எதிர்

ஐயாமுத்து குணபாலசிங்கம்,
மே/பா மயில்வாகனம் இராமலிங்கம்,
ஐயனார் கோயில் வீதி,
5ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
- எதிர்மனுதார்.

இவ்வழக்கு 2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் 04ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு.இத.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் மனு தாரும் மனுதார் சார்பில் சட்டத் தரணி திருமதி பவானி சற்குணராசாவும் ஆஜராக இருக்கவும் எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது,

மனுதாரின் மனு, சத்தியக்கூற்று மன்றில் மனுதாரின் சட்டத்தரணியால் செய்யப்பட்ட சமர்ப்பணம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்துப் பார்த்தபொழுது மனுதாரினால் ம.1 என அணைக்கப்பட்ட ஆவணத்தின் மூலம் மனுதாருக்கும் எதிர்மனுதாருக்கும் இடையே 07-02-1979 இல் பதிவுத்திருமணம் நடைபெற்றுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாலும், மனுதாரின் ம.2.ம.3 ஆவணங்களைப் பரிசீலித்தபொழுது எதிர்மனுதார் 1994ஆம் ஆண்டிலிருந்து மனுதாரைப் பிரிந்து வாழ்ந்தார் என்ற நிகழ்வு மன்றைத் திருப்திப்படுத்தக் கூடியவாறு வெளிக்கொணரப்பட்டுள்ள காரணத்தாலும் மனுதார் மனுவில் நிவாரணங்களைப் பெறத்தகுதியுடையவர் எனக் கண்டு,

மனுதாருக்கும் எதிர்மனுதாருக்குமிடையில் 07-02-1979ஆம் திகதி பதிவுசெய்யப்பட்ட பதிவுத் திருமணத்தை 1994ஆம் ஆண்டிலிருந்து எதிர் மனுதார் மனுதாரை வன்மமாக உறவறுத்து வாழ்ந்து வருவதன் காரணத்தினால் குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் பிரிவு 608(2) (b) இன் கீழ் ரத்துச் செய்து கட்டளையிடப்பட்டு இதனால் பின்னுறுதித்தீர்வை வழங்கப்படுகின்றது.

இந்த பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்பட்ட பின் மனுதார் தன் கன்னிப் பெயரைப் பாவிக்கவும், திருமணமாகாத ஒரு பெண்ணுக்குரிய சகல சுதந்திர உரிமைகளையும் அனுபவிக்கலாமென்றும் இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகிறது.

இப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி எதிர்மனுதாருக்கு சேவிக்கப்பட்டு மூன்று (03) மாத காலத்துள் ஆட்சேபனை எதுவும் அணைக்கப்படாத பட்சத்தில் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும்.

2006 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 04ஆம் திகதி

| | | |
|---|---|---|
| வரைவு, | நீதிமன்றின் கட்டளைப்படி, | இ.த.விக்னராஜா, |
| மனுதாரின் சட்டத்தரணி | து.சிறீமோகன், | மாவட்ட நீதிபதி, |
| பவானி சற்குணராசா. | பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், | யாழ்ப்பாணம். |
| (51677)(26-32-45-19) | யாழ்ப்பாணம். | |

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி தியாகராஜா ஞானபூரணம்

01.06.2006இல் சிவபதமடைந்த அமரர் தியாகராஜா ஞானபூரணம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை, சபிண்டீகரணம் நாளை (30.06.2006) வெள்ளிக்கிழமை இல்லத்தில் நடைபெற்று, மறுநாள் 01.07.2006 சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"சீகல் கிங் கோர்ட்"
13A, 1/1, பஸல்ஸ் லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.
தொ.பே. 4516782

*கணவர் - தியாகராஜா (அப்பையா),*
**பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

*நிரந்தர முகவரி:*
72/9, பிரம்படி லேன், கொக்குவில்.

(51683)
(32-45-19)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**சுப்பிரமணியம் சிவலோகநாதன்**
(கூட்டுறவு கிளை முகாமையாளர்)
*திதி: சதுர்த்தி*

தோற்றம் 01-06-1953
மறைவு 10-07-2005

ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
நீங்கவில்லை உங்கள் நினைவு!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்....

58/1, நெடுக்குளம் வீதி,
கொழும்புத்துறை. (51653)(21-32-19-45)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

*மறைந்தும் மறவாத*

## 3 ஆம் ஆண்டின் நினைவஞ்சலி

மலர்வு 17 - 11 - 1933



உதிர்வு 03 - 07 - 2003

அமரர்
**கந்தையா கனகரத்தினம்**
(ஆசிரியர்)
*திதி: பூர்வபக்க சதுர்த்தி 29.06.2006*

எங்களுக்கு நல்வழிகாட்டிய அப்பாவே!
எமக்கு இனிய வாழ்வளித்த தெய்வமே!
என்றென்றும எங்கள் உயிர்உள்ளவரை
இந்த மண்ணில் உங்களோடு வாழ்ந்த நினைவுகள்
எம்மனதை விட்டு அகலாது
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'அரண்மனை',
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(51666)

உங்கள் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கும்
**அன்பு மனைவி,**
**அன்பான பிள்ளைகள்.**

## Save the Children
in Sri Lanka

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

We are looking for a committed, energetic and dynamic individual to join our team as a:

### LOGISTICS OFFICER – RADIO COMMUNICATION/ TRANSPORT

**Base Station : Jaffna**
**Remuneration : Rs. 27,276/=**

The Logistics Officer -Radio Communication/Transport will be responsible for all communications that pass through the SCiSL Jaffna Office via HF radio, in order to facilitate precise information exchange and security contact with the users of vehicles and staff moving in and out of the District. The incumbent of this position is expected to maintain a log of the movements and positions of all vehicles, map out the security related events on a daily basis, using the relevant map at the District Radio Room and provide up-to-date information, ensuring that the safety practices of SCiSL are abided by at all times. **Only Sri Lankan citizens are eligible to apply for this position.**

**Qualifications & Experience**

**Essential**

1. Good knowledge and experience of handling radio communication and fleet management, including basic administration.
2. Proven experience in similar capacity.
3. Good interpersonal and communication skills in written and spoken English and Sinhala/Tamil with computer literacy in Microsoft Office.
4. Ability to work independently using own initiative within the scope of responsibilitie
5. Ability and willingness to travel to all parts of the country.

**Desirable**

1. Ability to identify vehicle spare parts.
2. Holding a Motor Coach Driving License.
3. Knowledge of third language.

**The above position would be initially for a period of one year.**

Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

The position applied for, should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Please ensure that the names of two non-related referees are provided to:

**District Manager**
**Save the Children in Sri Lanka**
**146, Temple Road, Nallur**
**Jaffna**

**Closing Date: 13th July 2006**
Only applicants selected for the interview will be contacted.
No telephone enquiries please

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in 120 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education, Children Affected by Armed Conflict/Disaster, Social Harmony** and **Peace, Temporary Shelter, Livelihoods Recovery and Emergency Preparedness.** Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

**Protecting Rights - Promoting Responsibilities**


## LONDON ENGLISH COLLEGE

புதிய ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட கற்கைநெறி...........

3 Months

Week days Classes
Mon / Wed / Fri } 2pm - 5pm

Diploma in English

Reading
Writing
Listening
Speaking

Start on 03.07.2006

★ தனித்தனி ஆசிரியர்களின் வழிகாட்டலில் ஒவ்வொரு திறனையும் கற்றுக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.....

**Spoken English**

பாடசாலை மாணவர்கள், அலுவலகப்பணியாளர்கள் மற்றும் ஆங்கிலம் பேச விருப்பமுள்ள அனைவருக்குமான கற்கைநெறி....

FREE STUDY PACK

Week days Classes start on...
3 Months 01.07.2006

வெளிநாட்டில் உயர்கல்வியினை மேற்கொள்வோருக்கு

**IELTS**

150 hours

Week - ends Classes start on... 01.07.2006 Sat / Sun } 2pm - 5pm
★ கட்புல செவிப்புல சாதனப் பயன்பாடு...

வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்

BSNS

**105, Arasady Road, Jaffna.**
021 222 5889, 0779508972


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Office Space 1500 Squre feet Available for Rent**

1. Suitable for - N.G.O, Bank, State Corperation, Show Room, Sales Centre, for Reputed firms in Colombo
2. Place - Stanley Road, Jaffna
3. Rent - Negotiable
4. Contact - T.P.No.: 2222413

(51678)



**வேலை ஆள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல சைவ ஹோட்டலுக்கு பின்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

1.உணவு பரிமாறுவோர்
2.சமையலறை வேலையாள்கள்
3.மேற்பார்வையாளர்

ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கவும்.
சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
**விளம்பர இல. 2902 மே/பா, உதயன்.**

(51655)


பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

**மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

சேவைநலன் பாராட்டு விழா

ஆசிரியர் திரு நடராசா காளிதாசன்

*எமது கல்லூரி ஆசிரியர் திரு.ந. காளிதாசன் அவர்கள் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு இன்று (29.06.2006) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சேவை நலன்பாராட்டு விழா ஒன்றை நடத்தப் பாடசாலைச் சமூகம் தீர்மானித்துள்ளது.*

*தாங்களும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.*

**தலைவர்.** **செயலாளர்.**

## மரண அறிவித்தல்

### சுப்பையா வதனச்சந்திரன்

(ராசன் - பிரான்ஸ்)



மானிப்பாய், சந்தையடிவீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா வதனச்சந்திரன் 27.06.2006 செவ்வாய்கிழமை பிரான்ஸில் அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் குட்டித்தம்பி சுப்பையா - இராசலட்சுமி சுப்பையா தம்பதியரின் அன்பு மகனும், சந்திரவதனி (லண்டன்), சாந்தமேனன்(பிரான்ஸ்), அம்பிகைபாகன் (லண்டன்), ஜெயபாகன்(லண்டன்), ரஜினி, கலாஜினி (ஆசிரியை கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரனும் தியாகராசா(லண்டன்), சர்மினி(பிரான்ஸ்), ரஞ்சினி(லண்டன்), கஜேந்தினி(லண்டன்), சிவபாலன்(சிவா ரெக்ஸ்ரைல்ஸ்- மானிப்பாய்), கங்காதரன்(கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆஷா, உஷா, நிரோஷா, திவியன், கவிஜா, துவாரகன், தெனிஷா, வற்ஷாங்கன் ஆகியோரின் அன்பு மாமனும் விதுஷன், சிவச்செல்வன், பிரியங்கா, ஐஸ்வரியா, நித்தியா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03-07-2006 திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சந்தையடி ஒழுங்கை, மானிப்பாய்.**
T.P: 7820

*தகவல்:*
(51686) **குட்டித்தம்பி சுப்பையா (தந்தை.)**


**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

தனுசு



**791** நீலம்

**27-06-2006**

செல்லுபடியாகும் தொடர் இல. **4351072 - 4365709**

வெற்றி இலக்கங்கள் **15 40 44 46**

**ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/- வெல்லப்படவில்லை**

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 71,18,200/-
தொடர் இல. 5247195 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கெட்டுக்கள்
2006 ஜுன் மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,19,667 | 10/- | 31,96,670/- |
| 2 இலக்கங்கள் | 29,327 | 20/- | 5,86,540/- |
| 1 இல+லக்கினம் | 28,953 | 30/- | 8,68,590/- |
| 2 இல+லக்கினம் | 2,679 | 100/- | 2,67,900/- |
| 3 இலக்கங்கள் | 790 | 500/- | 3,95,000/- |
| 3 இல+லக்கினம் | 76 | 5,000/- | 3,80,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | | | 60,94,700/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,04,700/- | 10,23,500/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,81,501 | | 71,18,200/- |

இந்த வெள்ளிக்கிழமை
**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 17,13,600/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 4359514-6-00 |
| கேகாலை | 4357986-9-35 |
| மட்டக்களப்பு | 4357962-8-86 |
| அம்பாறை | 4354342-6-18 |
| காலி | 4356747-1-26 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03


## பருத்தித்துறையில் சுடப்பட்டவரை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29

பருத்தித்துறை பரியாரியார் வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட நபரை அடையாளம் காண உதவுமாறு பருத்தித்துறை வைத்தியசாலைப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

அவர் வசமிருந்த அடையாள அட்டை மூலம் அவர் அம்பாறை, ஒலுவிலைச் சேர்ந்த கனகரத்தினம் யோகராசா (வயது 49) என்பவர் என இனங்காணப்பட்டுள்ளார் என்றும்-

சாவகச்சேரி கல்வயல் கிராமசேவையாளர் ஊடாககுறிப்பிட்ட நபர் அடையாள அட்டை பெற்றுள்ளார் என்றும் வைத்தியசாலைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இருபிள்ளைகளின் தந்தையான இவர் கற்கோவளத்தில் தங்கியிருந்தார் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும்- அவர் மேலும் தெரிவித்தார்.

## துன்னாலையில் நேற்று சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

துன்னாலைப் பகுதி நேற்றுக்காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இதனையடுத்து கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் வாகனங்கள் கலிகைச் சந்தியில் பலத்த சோதனைக்கு உள்ளாகின.

வாகனங்களில் பயணித்த பயணிகள் அனைவரும் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர். (117)


3ஆவது வெற்றி வாரமாக



யுனிவர்சிட்டி புகழ் ஜீவன், சோனியா அகர்வால், விவேக் நடித்த

**திருட்டுப் பயலே**

**மனோகரா** யாழ்ப்பாணம்

10.30, 2.30, 6.30 மணிக்கு



**ராஜா** யாழ்ப்பாணம்

கரன், சாதனா நடித்த

**கொக்கி**

புதிய வெளியீடு

(சி-47139)

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்



**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்

காட்சி நேரம் : 10.30, 2.30

ஜித்தன் புகழ் ரமேஸ், பிரியாமணி, விவேக் நடித்த

**மது**

(சி-49188)



**பதவி வெற்றிடம்**

செலிங்கோ ஆயுட் காப்புறுதி நிறுவனம்
யாழ். கிளை

25.06.2006 உதயனில் பக்கம் 8 இல் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட நேர்முகத் தேர்வு (01.07.2006 சனிக்கிழமை) தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செலிங்கோ ஆயுட் காப்புறுதி நிறுவனம்
யாழ்ப்பாணம்.

(சி/49865)


## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா நல்லதம்பி

சுழிபுரம் மேற்கை பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா நல்லதம்பி அவர்கள் 26.06.2006 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் சு.நல்லதம்பி (நல்லராசா வாத்தியார்) அவர்களின் அருமை மனைவியும் இரதி, காலஞ்சென்ற மதிவதனி மற்றும் தேவி, இராசதிலகம், சுப்பிரமணியம், சந்திரமதி, சிவபதி, கலாராணி ஆகியோரின் அன்புத் தாயும் நடராசா, ஆறுமுகம், நல்லையா, ஜெயராசா, இராஜேஸ்வரன், தயாபரன் ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற கந்தசாமி, சின்னப்பு ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2006) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நடராஜா காந்தரூபன் (பேரன்)*
சுழிபுரம்.

**தகவல்:**
மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### நல்லதம்பி பொன்னம்பலம்



ஆசிரியர் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லதம்பி பொன்னம்பலம் நேற்று (28-06-2006) புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற நாகராசா (பொறியியலாளர், மகாவலி அபிவிருத்திச் சபை) மற்றும் மகேஸ்வரி(கொழும்பு), நாகேஸ்வரி(இத்தாலி), சிவராசா (கொழும்பு), காலஞ்சென்ற மோகனதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.06.2006) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆசிரியர் வீதி, சாவகச்சேரி.

தகவல்:
**குடும்பத்தினர்**

### வேலன் இராமசாமி



கதிரிப்பாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் இராமசாமி அவர்கள் 27.06.2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*105 (425), ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(51679)

**தகவல்:**
**காமினி (மகன்).**

### ஆனந்தநடராஜா சச்சிதானந்தன்

*(பேபி-பொறியியலாளர்)*

சுன்னாகம், தில்லைகட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தநடராஜா சச்சிதானந்தன் அவர்கள் 25.06.2006 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் அமரர்களான ஆனந்தநடராஜா - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் வசாவிளானைச் சேர்ந்த அமரர் *Dr.*கந்தையா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சியாமளாநாயகி *(Doctor)* அவர்களின் அன்புக் கணவரும் சோபிதா (மருத்துவபீட மாணவி), சங்கீதா, சாருமதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கணாநந்தன் (பவா-கணக்காளர் - லண்டன்), நவானந்தன் (பொறியியலாளர் - அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2006) வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு (இலங்கை நேரப்படி) லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*135, MIDDLE FIELDS*
*PIHTON WAY*
*CROYDON*
*CRO9LJ*
*UK.*
T.P - 0044 208 6510340, 0044 208 681 8507, 0017819427087.

**தகவல்:**
*குடும்பத்தினர்.*
*T.P- 077 6051927,*
*060 2212709.*

(சி-49866)

### க.சுப்பிரமணியம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர். அல்லாரை (G.T.M.S) அ.த.க.பாடசாலை)*



மீசாலை மேற்கு, கேணியடி வீதியைச் சேர்ந்த க.சுப்பிரமணியம் அவர்கள் 26.06.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சேதுநாயகியின் (ஓய்வுபெற்ற நெசவாசிரியர்) அன்புக்கணவரும் சிவகுமார்(லண்டன்), சிவசுதன்(இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவமதி(லண்டன்), ஜெயசுதா (இந்தியா) ஆகியோரின் மாமனாரும், சாம்பவி, விதுஷன், சோபிதா, கர்சிதா ஆகியோரின் பேரனுமாவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேணியடி வீதி,*
*மீசாலை மேற்கு, மீசாலை.*

(51694)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

### தர்மலிங்கம் ஸ்ரீகாந்தன்



உரும்பிராய் மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட தர்மலிங்கம் ஸ்ரீகாந்தன் 28.06.2006 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விதானையார் தர்மலிங்கம்-பரிமளம் தம்பதியரின் மகனும், அமரர் பூபாலசிங்கம்-கண்மணி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கெங்காதேவியின் அன்புக்கணவரும் ஸ்ரீயாந்தி(கனடா), சுயந்தி, காலஞ்சென்ற நிசுந்தி, சிரோஜன், காலஞ்சென்ற லக்சினி ஆகியோரின் தந்தையும், ஜெகதீஸ்வரன்(கனடா), சிவகுமார் (ஆசிரியர்-கோப்பாய் ஆசிரியர்கலாசாலை) ஜீவானந்தன்(கனடா) ஆகியோரின் மாமனும் இராமகிருஷ்ணன், நாகராசா, காலஞ்சென்ற இராமேஸ்வரன், ஜெயக்குமாரன்(ஜேர்மனி), காலஞ்சென்ற ஸ்ரீபாலன், மதிவதனி(கனடா), ஆகியோரின் சகோதரரும் சந்தியா, கீர்த்திகா, பிரதீபன், மதுசனா, திவ்வியன், தூயோன் ஆகியோரின் அன்புப் பேரனும். தர்மபாலன், கிருஷ்ணபாலன், ஞானதேவி, ரகுபாலன், தர்மதேவி (ஆசிரியர்-யா/வயாவிளான் ம.ம.வி) மல்லிகாதேவி, விக்னேஸ்வரி, யோகேஸ்வரி, றஞ்சனி, வசந்தாதேவி, பரமேசன் ஆகியோரின் மைத்துனரும், இராஜேஸ்வரி, ரஞ்சினிதேவி, வெற்றிவேலாயுதம், பாலஸ்ரீ, மனோகரன்(சிவசக்தி ஸ்ரோஸ்) ரவீந்திரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2006) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பன் மயானத்திற்கு அடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு.

*தகவல்:*
**சுயந்தி சிவகுமார், உறவினர்கள்.**

(51691)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சியின் தலைவராக மஹிந்த ஏகமனதாகத் தெரிவு!



கொழும்பு, ஜூன் 29. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

நேற்றிரவு சுமார் மூன்று மணிநேரம் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்தத் தெரிவு இடம்பெற்றது.

கட்சியின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷவை அமைச்சரும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான நிமால் சிறிபால டி சில்வா முன்மொழிந்தார். முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அதனை வழிமொழிந்தார்.


இன்று நடைபெறவிருக்கும் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தெரிவு மேலதிக அங்கீகாரத்துக்கு விடப்படும். அதன் பின்னர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

பெரும் சர்ச்சைகள், எதிர்ப்புகளுக்கு மத்தியில் இந்தத் தலைமைப் பதவித் தெரிவு நடந்தேறியிருக்கின்றது:

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் சகோதரரும் அமைச்சருமான அநுரா பண்டாரநாயக்கா நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

கட்சியின் தலைமைப் பதவி மாற்றத்தை அவர் கடுமையாக எதிர்த்து வந்தார்.

இதுவரை கட்சித் தலைமைப் பதவியை வகித்து வந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அவரது பிறந்த தினமான இன்று கட்சியின் தலைமைப் பதவி மாற்றம் தொடர்பான அறிவிப்பு வெளியாக உள்ளது. இது குறித்து கட்சிக்குள் ஒரு சாராரிடையே நேற்றுச் சலசலப்பு ஏற்பட்டதாகத் தெரிகின்றது.



தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட மூத்த இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பராமிகுலதுங்கவின் பூதவுடல் பூரண இராணுவ மரியாதையுடன் கனத்தை பொது மயானத்தில் நேற்று அடக்கம்செய்யப்பட்டது. மயானம் நோக்கி பூதவுடல் தாங்கிய பேழை எடுத்துச் செல்லப்பட்டபோது.....

## ஒன்பது பொறியியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலை), ரி. நிஜந்தன் (வெள்ளவத்தை), டி.ஆர்.கூஞ்ஞு(பேசாலை, மன்னார்), கே. துஷியந்தன் (மன்னார்), எஸ்.தினேஷ் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

சம்பந்தப்பட்ட வீட்டில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக வாடகைக்குத் தங்கியிருந்து இவர்கள் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வருகின்றனர் என்றும் -

அப்பிரதேச சிங்களவர்கள் கொடுத்த முறைப்பாட்டின் பேரில் அப்பகுதி பொலீஸாரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் - கூறப்படுகின்றது.

இவர்கள் கைதான தகவல் கிடைத்ததும் கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியான தி. மகேஸ்வரன் பொலீஸ் நிலையத்துக்குச் சென்று அவர்களைப் பார்வையிட்டார். கைதுகளை ஆட்சேபித்தார். பொலீஸாரோடு வாக்குவாதத்திலும் ஈடுபட்டார்.

இந்த தமிழ் மாணவர்கள் சார்பில் சட்டத்தரணி ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜராக ஏற்பாடு செய்த மகேஸ்வரன் எம்.பி., அப்பாவித் தமிழ் மக்களைக் கைதுசெய்யும் படலம் ஆரம்பித்துவிட்டதாகக் குற்றம் சாட்டினார்.

காரணமின்றி இத்தகைய கைதுகளை முன்னெடுக்கும் பொலீஸாருக்கு எதிராக அவர்களின் பெயர் குறிப்பிட்டு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளிடம் நேரில் முறையிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## கற்பிட்டிக் கடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் கடற்படையின் கரையோர ரோந்துப் படகு ஒன்று தீப்பற்றி எரிந்தது என்று கடற்படை வட்டாரங்கள் கூறின.

''சண்டை நடந்து கொண்டிருக்கிறது. கடற்படைப் படகு ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது'' என்று கடற்படைப் பேச்சாளர் நேற்று நண்பகல் தகவல் வெளியிட்டார்.

இந்தச் சண்டையில் கடற்படையினருக்கு விமானப்படையினர் உதவி வழங்கி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தீப்பற்றி எரிந்து கடலில் மூழ்கிய படகில் குறைந்தது ஏழு கடற்படையினர் வரை இருந்திருக்கலாம் என்றும் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டதால் உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் தொடர்பான முழுமையான விவரங்களை உடனடியாக அறிந்து கொள்ள முடியவில்லை என்றும் கடற்படை வட்டாரங்கள் கூறின.

### புலிகளின் அறிக்கை

இந்தச் சமர் தொடர்பாக விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்தில் எமது நிர்வாகக் கடற்பரப்பில் வழமையான கடற் பயிற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்புலிகளின் படகு ஒன்றின் மீது தமிழீழ கடல் இறைமையையும், போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறும் வகையில் நீர் உந்து விசைப் படகுகளில் வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தினர்.

புதன்கிழமை காலை 11.25 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து சுமார் 55 நிமிட நேரம் நீடித்த கடற் சமரில் தாக்குதலை நடத்த வந்த ஸ்ரீலங்கா கடற்படையின் நீர் உந்து விசைப் படகு ஒன்று சேதமாக்கப்பட்டு கடலில் மூழ்கடிக்கப்பட்டது. அதிலிருந்த ஐந்து ஸ்ரீலங்கா கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

கடற்புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத ஏனைய ஸ்ரீலங்கா கடற்படைப் படகுகள் சேதமடைந்த மற்றைய படகு ஒன்றையும் இழுத்துக் கொண்டு அவ்விடத்திலிருந்து பின்வாங்கிச் சென்றன.

இம் மாதத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினர் தமிழீழக் கடற்பரப்பில் போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பலவீனப்படுத்தும் பாரிய மோதல்களை ஏற்படுத்துவது இத்தோடு மூன்றாவது முறையாகும்.

இக்கடற் சமரின்போது தமிழீழ கடற்படைப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். மேலும் இருவர் காயமடைந்திருக்கின்றனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புத்தளத்தில் பதற்றம்

இதற்கிடையில் -

கடலில் மூண்ட சமரை அடுத்து புத்தளம் நகரிலும் கரையோரப் பகுதிகளிலும் நேற்றுப் பகல் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

புத்தளம் நகரினுள் திடீரென நுழைந்து கடற்படையினர் வானை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் - இதனால், நகரில் பதற்றம் எற்பட்டு நகரப் பகுதி வெறிச்சோடியது என்றும் அங்கிருந்து கிடைத்த தகவல் தெரிவித்தது. நகரினுள் கடற்படையினர் நுழைந்து வான் நோக்கித் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்து வீதியில் நின்ற அனைவரையும் விரட்டியடித்தனர்.

பாடசாலைகள், கடைகள், அரச மற்றும் தனியார் அலுவலகங்கள் போன்றவை அனைத்தும் நண்பகல் 12 மணியுடன் மூடப்பட்டன. கற்பிட்டியில் இருந்து ஏனைய இடங்களுக்கும், ஏனைய பகுதிகளிலிருந்து கற்பிட்டிக்குமான பயணிகள் போக்கு வரத்துச் சேவைகளும் நிறுத்தப்பட்டன. கடல் மார்க்கமான பயணிகள் படகுச் சேவையும் நிறுத்தப்பட்டது.

மக்கள் எவரும் வீதிக்கு இறங்கவில்லை. வீடுகளுக்குள்ளே அடங்கிக் கிடந்தனர். கடற்படையினரும், பொலீஸாரும் கற்பிட்டி பிரதான வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு பாதுகாப்பைப் பலப்படுத்தினர்.

கடற்பரப்பிலும் படகுகள் மூலம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் உடனடியாகக் கரையை நோக்கி அனுப்பப்பட்டனர்.

அத்தோடு கற்பிட்டி கடற்படை முகாமின் ஊடாகச் செல்லும் பிரதான வீதியை கடற்படையினர் போக்குவரத்துக்குத் தடை செய்தனர்.

## எந்தவித அழுத்தங்களுக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துவதற்கும், குழப்புவதற்கும் படையினரும் அவர்களுடன் இயங்கும் கூலிப்படைகளும் முயற்சித்துவருகின்றன. யாழ். மக்களின் குடியிருப்புக்களையும் நிலபுலங்களையும் பாதுகாப்பு என்ற பெயரில் ஏப்பம்விட்டு இன்று அவர்களின் சாத்வீகப் போராட்டத்தை தமது ஆயுதமுனையில் அடக்கமுயல்வது கண்டிக்கப்படவேண்டியது.

இது தொடர்பாக பொங்கியெழும் மக்கள் படை உன்னிப்பாக கவனம் செலுத்திவருகின்றது. எனவே, எந்தவித அழுத்தங்களுக்கும் அடிபணியாது பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் பூரணமாகப் பங்கேற்பதன் மூலமாகத் தொடர்ந்தும் எதிர்ப்பை படையினருக்குத் தெரியப்படுத்துவோம்.

வலிந்து தமிழ்மக்கள்மீது போரைத் திணிக்கவும், அப்பாவி மக்களை வகைதொகையின்றி கொன்று குவிக்கவும் திட்டமிட்ட இராணுவத்திற்கு மக்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தடையாகவிருப்பது உண்மையே.

இதனால், தமது உச்சப் பலத்தைப் பயன்படுத்தி மக்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைக் குலைத்து தமது கொலைவெறியை ஆரம்பிக்க நினைக்கும் படையதிகாரிகளே, படையினரே மிக உக்கிரமான தாக்குதல்களை எதிர்நோக்கத் தயாராக இருங்கள்.

-என்று அதிலுள்ளது.

இதேவேளை - குடாநாட்டில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது. போக்குவரத்து மற்றும் வைத்திய சேவைகளில் முடக்கம் ஏற்படுத்தப்படாத போதிலும் மக்கள் இயன்றவரை வீதிகளில் இறங்கி நடமாடித்திரிவதைத் தவிர்த்துவருவதையும் அவதானிக்கமுடிந்தது.

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர். மேசன் வேலைசெய்யும் தொழிலாளர்களே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளனர் என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

சின்னையா மகேஷ் வசந்தகுமார் (வயது - 26), முத்துக்கருப்பன் கிருஷ்ணகுமார் (வயது - 21), நவரத்தினம் அனுரசிறி (வயது - 22) ஆகியோரே இச்சம்பவத்தில் பலியாகியுள்ளனர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர்கள் மூவரும் மோட்டார் சைக்கிளொன்றில் பயணம் செய்தபோது வீதியில் மறைந்திருந்த இனந்தெரியாத நபர்கள் இவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். மோட்டார் சைக்கிள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்கள் இந்த வதந்தியைக் கேட்டு அச்சமடைந்து இடைவழியே வீடுகளுக்குத் திரும்பி விட்டனர். வதந்தி தீயாகப் பரவியதை அடுத்து பெற்றோர்களும் உடனடியாகப் பாடசாலைகளுக்கு விரைந்து சென்று தங்கள் பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர்.

இதேவேளை -

பாடசாலைகளின் பாதுகாப்பைப் பலப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் வீண் வதந்திகளை நம்பி யாரும் கலவரம் அடைய வேண்டாம் என்றும் ஜனாதிபதி செயலகம் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, இந்த வதந்தி குறித்து சரியான தகவல் ஏதும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் இருப்பினும் பாடசாலைகளின் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

இது பற்றி ஏதும் தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமக்கள் இருவரும் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.35 மணியளவில் இடம்பெற்றது. இதில் பனங்கட்டுக் கொட்டிலைச் சேர்ந்த தேநீர்க்கடை உரிமையாளரான செபஸ்தியான் செப மாலை(வயது -55) அவரது மனைவி மரிய நாயகி (வயது -43) ஆகிய பொது மக்கள் காயமடைந்தனர்.

## பட்டப்பகலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. யாழ்.நகரை அண்மித்த பகுதியில் வசிக்கும் வர்த்தகர் ஒருவர் கைப்பை ஒன்றினுள் வைத்து பணத்தை எடுத்து வந்த சமயம் கைத் துப்பாக்கி காட்டி பயமுறுத்திய இனந்தெரியாத நபர்கள் வர்த்தகரிடமிருந்த பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்பட்டது.

கடந்த ஒருமாத காலப்பகுதியில் யாழ். நகரப்பகுதியில் பட்டப்பகலில் இடம்பெற்ற மூன்றாவது கொள்ளைச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதாகர் (வயது 22), செபமாலை சுரேஷ் (வயது 29) ஆகியோர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முசலி பிரதேச செயலரால் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது என்றும் எனினும், நேற்று முன்னிரவுவரை அப்பகுதிக்கு கண்காணிப்புக் குழுவினர் சமூகமளிக்கவில்லையென்றும் இணையத்தளம் ஒன்று நேற்றிரவு செய்தி வெளியிட்டுள்ளது.


இணைந்த கணிதம்
பிரத்தியேக வகுப்புகள்
(Personal and Group classes)
G.R.குமார்
T.No-0777252125
206/2, Brown Road
Jaffna.

முகாமைத்துவ உதவியாளர்
அஞ்சல் உத்தியோகத்தர்
போட்டிப் பரீட்சை வகுப்புகள்
மொழித்திறன்
பொது உளச்சார்பு
ஆரம்பம் : 29.06.2006 2.30 p.m
வியா, வெள், சனி, ஞாயி
2.30-4.30 p.m
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ் வீதி இணுவில்

Spoken English
ஆரம்பம் : 01.07.2006
சனி 10 a.m
By:
A.Britto
அனுமதிகள் முன்கூட்டியே
பெற்றுக்கொள்ளவும்.
நுனிவேசல்
[யா/இந்து மகளிர் கல்லூரி அருகே]

Spoken English
with
Grammer
By: P.Inkaran
ஆரம்பம் : 01.07.2006
4 p.m
C.C.A சுன்னாகம்

SKY COMPUTER'S (PVT) LTD.
Affiliated with Irish International University (U.K)
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325

| | |
|---|---|
| Microsoft Office | 2 Month |
| Desktop Publishing | 3 Month |
| Computerized Accounting | 3 Month |
| Hardware Technology | 2 Month |

Internet & E-mail 2 Weeks (1000/=)
தமிழ்மொழியிலும் கற்பிக்கப்படும்
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளது.
Computer sales
Computer Repair
Computer Parts
Computer Maintanance
கணணி சம்பந்தமான தங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய நாடுங்கள் (Sky Computer System) நடமாடும் சேவையும் (Mobile Service) உண்டு
E-mail : skycom@WOW.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead

Diploma in Computerized Accounting
(With Manual Accounting)
#MYOB #Quick Book Pro #Accpack
50% சலுகைக்கட்டணம் 01-07-2006 முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
324, Palaly Road, Jaffna. *Supported by UNDP/JRRP*

Diploma in Computer Programming
#Visual Basic # VB.Net # Java
50% சலுகைக்கட்டணம் 01-07-2006 முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
324, Palaly Road, Jaffna. *Supported by UNDP/JRRP*

Microsoft Certified Systems Engineer (Network Based Syllabus)
Network சார்ந்த அறிவு, Microsoft நிறுவன அதிபரின் சான்றிதழ், வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள், மேலும் பல.........
MCS 30.06.2006 ... 50% ... Teach by: MCSE holders
Supported By UNDP/JRRP மேலதிக விபரங்களுக்கு நேரடியாக... 324, Palaly Road, Jaffna.

தேவை
எழுதுவினைஞர்கள்
க.பொ.த உயர்தரத்தில் கணக்கியலுடன் சித்தியடைந்த ஆண் எழுதுவினைஞர்கள் தேவை. கணனி அறிவு விரும்பத்தக்கது. யாழ். மாநகர சபை எல்லைக்குள் அல்லது அதன் சுற்றாடலில் வசிப்பவர்கள் 30.06.2006 காலை 10 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு வரவும்.
உதயன் மனிதவள சேவை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/49869)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.